Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 15 (18.02.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :139

**English Academy**

Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, சித்தன்கேணி.



Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு
உங்கள் பிள்ளைகளை சேருங்கள்

(சி-569)

# வடக்கு - கிழக்கில் நாளை கறுப்புப்பட்டிப் போராட்டம்!

## படையினரின் அத்துமீறலைக் கண்டித்து

(யாழ்ப்பாணம்)

**சமாதான முன்னெடுப்புகளைக் குழப்பும் ஆயுதப்படையினரின் யுத்த நிறுத்த மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாளை புதன்கிழமை வடக்கு-கிழக்கு எங்கும் கறுப்புப்பட்டிப் போராட்டம் நடாத்த யாழ். மாவட்டப் பொது அமைப்புகள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.**

நாளை நடைபெறும் இப்போராட்டத்தின்போது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையாது, நாளாந்தப் பணிகளுக்கு இடையூறின்றிச் செயற்படுமாறு ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. அனைவரும் அன்றையதினம் கறுப்புப்பட்டி அணியுமாறும் வாகனங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசு - புலிகள் உடன்பாட்டை மீறி சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பும் சிறிலங்கா ஆயுதப்படையினரின் யுத்தநிறுத்த மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் முழுஅளவில் கறுப்புப்பட்டி அணிநத போராட்டம் ஒன்றினை நடாத்தப் பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்து வருகின்றன். இதனை நாளை புதன் கிழமையன்று நடைமுறைப்படுத்தும்படி, யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் அனைத்துப் பொது அமைப்புக்களையும் கேட்டுள்ளது.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## டோறா படகுகள் ரோந்து

(கிளிநொச்சி)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுக்காலை முதல் மாலைவரை, கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதையடுத்து மக்கள் அச்சமும் பீதியும் அடைந்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஹர்த்தாலினால் நகரம் முழுதும் ஸ்தம்பிதம்



திருகோணமலை சாம்பல்தீவுச் சந்தியில் கடந்த வெள்ளியன்று கைதான இரண்டு விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகளை விடுவிக்க வேண்டுமென்றும், கோபாலபுரம் பகுதியில் அமைக்கப்பட் டுள்ள நினைவுத் தூபியைத் திறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்தும், மானிப்பாயில் விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்தும் நேற்று திருகோணமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக நகரிலுள்ள வாத்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. அரச அலுவலகங்களும் மூடப்பட்டதுடன், வாகனப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள் விலை அதிகரிப்பை எதிர்த்து சத்தப் போராட்டம்!





தடிகளில் பாண் குத்தப்பட்டிருக்க, எழுப்பப்படுகிறது சத்தம்.

துந்துபி கொண்டு ஓசை எழுப்புகிறார் மகிந்த ராஜபக்ஷ.

(கொழும்பு)

அதிகரித்துவரும் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்தன. கடுவலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் கலந்துகொண்டார்.

பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்க, அரசாங்கம் முன்வர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்தார்.

சத்தப் போராட்டம் (ஜனகோஷ) என்று பெயரிடப்பட்ட இப்போராட்டத்தின்போது, இசைக்கருவிகள் பெரும் ஒலியில் இசைக்கப்பட்டும் கூக்குரலிட்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கொழும்பின் லிப்டன் சதுக்கம், கடுவெல சந்தி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பெருமளவிலானோர் கலந்துகொண்டனர்.

## இலங்கை - நோர்வே ஆலோசனை மாநாடு


இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான வருடாந்த ஆலோசனை மாநாடு நேற்று ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவும், நோர்வே அரசின் சார்பில் உதவி அபிவிருத்திக் கூட்டுறவு அமைச்சர் ஒலா ஒட்ஜேவா தலைமையிலான பதின்மூன்று பேர் அடங்கிய குழுவும் கலந்து கொள்கின்றன.

இலங்கையின் அபிவிருத்திக்கான நோர்வேயின் உதவிகள் மற்றும் இந்த வருடத்தில் வழங்கப்படும் உதவிகள் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் ஆராயப்படுகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அமைதியைக் கொண்டு வந்தால் ஏன் உப்பிடி தொண்டை கிழியக் கத்தவேணும்...?

# தம் மீதான தாக்குதல்களைக் கண்டித்து யாழ். ஊடகவியலாளர் நேற்று போராட்டம்!

## வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டியிருந்தனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீது, படையினரும் பொலிஸாரும் நடத்தி வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து, நேற்று யாழ். அரச செயலகத்தில் இயங்கும் தகவல் திணைக்களத்திற்கு முன்பாக, யாழ். ஊடகவியலாளர் சங்கத்தினர் அடையாள எதிர்ப்புப் போராட்டமொன்றை நடாத்தியதுடன், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு, யாழ். அரச அதிபர் ஊடாக மகஜரும் அனுப்பிவைத்தனர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் ஆகியோருடன் புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்தில்வேல், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில், சலன சித்திர அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் யாழ். குடாநாட்டில் பணிபுரியும் பத்திரிகையாளர்களும் பங்கேற்றனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் தமது வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டியிருந்ததுடன், பல வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, விநாயகமூர்த்தி ஆகியோரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)



SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

(சி-518)

## பாடசாலைகளில் மாணவர் அனுமதி அன்பளிப்புகள், பணம் பெறும் அதிபர்கள் மீது நடவடிக்கை!

மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும்போது உதவி நிதிகளோ, அன்பளிப்புக்களோ வற்புறுத்திப் பெறுவது விரோதச் செயல். அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் மாகாணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம்.

இது தொடர்பாக வலயக் கல்வித் திணைக்களத்திற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் - 'பாடசாலைகளில் அதிகளவு நிதி வசூலிப்பு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தேசிய, மாகாணப் பாடசாலைகளில், புதிய மாணவர்களைப் பாடசாலைக்கு அனுமதிக்கும்போது, அதிகளவான நிதி பெற்றோர்களிடமிருந்து அறவிடப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. ஏழைப் பெற்றோர்களிடம் அன்பளிப்பு என்ற பெயரில் கட்டாய நிதி வசூலிப்பு பாடசாலைகளில் நடைபெறுவதை முறைப்பாடுகளிலிருந்து அறியமுடிகின்றது. இந்தச் செயற்பாடு இலவசக் கல்வி முறைமைக்கு முரணானது. கல்வி அமைச்சினுடைய சுற்றுநிருபத்திற்கும் முரணானது.

மாணவர்களை புதிதாக அனுமதிக்கும்போது உதவி நிதியோ, அன்பளிப்புக்களோ மற்றும் பொருட்களோ எவர் மீதும் வற்புறுத்திப் பெற்றதாகவோ, தொந்தரவு கொடுத்துப் பெற்றதாகவோ இருக்கக் கூடாது எனவும் அழுத்திக்கூறப்பட்டுள்ளது. இவ்வாறான வற்புறுத்தல்கள் முழுமையான விரோதச் செயல் ஆகும். இந்தச் செயலில் ஈடுபடும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும்.

பாடசாலை அதிபர்கள், நிதி தொடர்பான சுற்றுநிருபங்களைக் கடுமையாகப் பின்பற்றும்படி ஆலோசனை வழங்குவதுடன், தொடர்ந்து வற்புறுத்தல்களின் பேரில் நிதி வசூலித்தல் தொடர்பாக முறைப்பாடுகள் எழாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சகல கல்வி வலயப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

## பாடசாலைகளில் 21 ஆம் திகதி சமாதான தினம் அனுஷ்டிப்பு

### கல்வி அமைச்சர் சுற்றுநிருபம்

பாடசாலைகளில் எதிர்வரும் 21 ஆம் திகதியை பாடசாலை சமாதான தினமாக அனுஷ்டிக்குமாறு பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபத்தினை அமைச்சின் செயலாளர் எச்.ஏ.சிரிசேன, திணைக்கள அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதியை பாடசாலைகளிலும் சமாதான தினமாகப் பிரகடனப்படுத்துவதுடன், சமாதானம், தேசிய நல்லிணக்கத்திற்காக பாடசாலைகளில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடாத்தவும் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

## குழந்தை நோயியல் நிபுணர் ஒருவர் யாழ். வைத்தியசாலையில் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா வைத்தியசாலைக்கு குழந்தை நோயியல் வைத்திய நிபுணர் ஒருவர் புதிதாகப் பதவியேற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து வருகைதந்த, டாக்டர் அ்ரின் கே.மோறல் எனும் வைத்தியரே இவ்வாறு பதவியேற்றுள்ளார்.

இன்றிலிருந்து அவர் தமது கடமையைப் பொறுப்பேற்றுச் செய்ய உள்ளார் எனத் தெரியவருகிறது.

நீண்டகாலமாக யாழ்போதனா வைத்தியசாலையில், நிரந்தர - குழந்தை வைத்திய நிபுணர் இல்லாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரா)

## ஜா எலவிலிருந்து வந்தோருக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு!

யாழ். வஸ்தியன் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் திடீரென இராணுவத்தினர் காவல் கடமைக்காக நிறுத்தப்பட்டனர்.

அன்றைய தினம் முன்னிரவு வேளை, அப்பகுதியிலுள்ள றான் விடுதிக்கு முன்பாக, ஜா எலவில் இருந்து வந்த மூன்று பஸ்வண்டிகள் தரித்து நின்றன.

அதிலிருந்து இறங்கிய சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் றான் விடுதியில் தங்கியிருந்தனர். இவர்கள் கம்பஹா மாவட்ட ஐ.தே.க. ஆதரவாளர்கள் எனத் தெரிய வருகின்றது.

இந்த இளைஞர் குழுவினருக்கே மேற்படி பகுதியில் இராணுவப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்பது பின்னர் தெரியவந்தது. நேற்றைய தினமும் மேற்படி இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தன.

### கணினி மையம் நேற்று வேலணையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தகவல் தொழில்நுட்ப மையத்தின் கணினி மையம் நேற்று வேலணையில் திறந்துவைக்கப்பட்டது.

தீவகத்திலுள்ள தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட கணினி மையத்தினை, யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் திறந்து வைத்தார். (ரா,லி)

## நானூறு விவசாயக் குளங்கள் 'நியாப்' திட்டத்தில் புனரமைப்பு

(கிளிநொச்சி)

வட - கிழக்குப் பகுதியில் 'நியாப்' திட்டத்தின் கீழ் நானூறு விவசாய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கடந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்ட வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 29 நீர்ப்பாசனக் குளங்கள் இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நான்கு குளங்களும், பூநகரியில் பத்துக் குளங்களும், கரைச்சியில் 11 குளங்களும், கண்டாவளையில் 4 குளங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இதே போன்று ஏனைய மாவட்டங்களிலும் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இன்றைய நாள் இனிய நாள்

### 18-02-2003 - செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- உறவினரால் கவலை, நினைத்த காரிய சித்தி, தன தானிய நிறைவு, குடும்ப மகிழ்ச்சி. |
| இடபம் | :- விரோதம், வாக்குக் கலகம், காரியக்கேடு, பிள்ளைகளால் கவலை. |
| மிதுனம் | :- இனசன கொண்டாட்டம், நற்கீர்த்தி, பெரியோர் மதிப்பு, அதிகார வெற்றி. |
| கர்க்கடகம் | :- இனசன விரோதம், குடும்பக் கலகம், பொருட்சேதம், மனக் கவலை. |
| சிங்கம் | :- குடும்ப மனஸ்தாபம், பலவித பொருட்பேறு, நண்பரால் நன்மை. |
| கன்னி | :- பயனற்ற பிரயாசம், வாக்கு வசீகரம், வாகன சுகம், நற்கீர்த்தி. |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- இல்லச் சிறப்பு, காரிய சித்தி, தன லாபம், தேகசுகக் குறைவு. |
| விருச்சிகம் | :- காரிய விக்கினம், வாக்கு வசீகரம், பெரியோர் மதிப்பு, நற்கீர்த்தி. |
| தனு | :- பிரயாண கஷ்டம், தாரபுத்திர சுகம், தேகசுகக் குறைவு, சத்துரு பீடை. |
| மகரம் | :- இலட்சுமீகரம், நன்மதிப்பு, தனலாபம், களஸ்திர சுகம். |
| கும்பம் | :- வயிற்றில் ரோகம், தேகமெலிவு, பெரியோர் சிநேகம், நன்மதிப்பு. |
| மீனம் | :- இல்லச் சிறப்பு, பெண்களால் நன்மை, மன மகிழ்ச்சி, குடும்பச் சிறப்பு. |

## ராணுவ, பொலிஸ் பாதுகாப்பே ரத்வத்தவுக்கு வழங்கப்பட்டது

### உடத்தலவின்னை வழக்கில் இராணுவத் தளபதி சாட்சியம்

உடத்தலவின்னை படுகொலை வழக்கை விசாரணை செய்யும் மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல நேற்று சாட்சியமளித்தார்.

பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் பாலித பெர்ணான்டோவின் வழிகாட்டலில் சாட்சியமளித்த அவர்,

பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு இராணுவத்தில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் உள்ள போதும், முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் பாதுகாப்புக்கு இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டதாகக் கூறியிருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 திகதிக்கு முன்னர், ரத்வத்தயின் பாதுகாப்பைப் பலப்படுத்த தாம் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

ரத்வத்தவின் அந்தரங்கச் செயலாளர் பிரிகேடியர் குலங்கமுவ, நவம்பா மாதம் 28 ஆம் திகதி தம்முடன் தொடர்புகொண்டு, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

இதன்பிரகாரம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய லெப்டினன்ட் விஜயரத்ன, ரத்வத்தவின் பாதுகாப்புக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

மத்திய பிராந்திய பிரிகேடியர் தம்மிக, லெப்டினன்ட் விஜயரத்ன தலைமையிலான குழுவுக்கு, தேர்தல காலத்தில் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தியதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

தேர்தல் காலத்தில் பிரிகேடியர் தம்மிக விடுத்த பணிப்பின் பேரில், சில நாட்களில் கடமைகளில் ஈடுபட லெப்டினன்ட் விஜயரத்னவுக்கும் ஏனைய சிலருக்கும் அனுமதி வழங்கியதாக பலகல்ல நீதிமன்றில் மேலும் தெரிவித்தார்.

### பிரதமர் ரணில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

எதிர்வரும் 27 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

அவர் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி அப்துல் கலாம், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா உட்பட பல இந்தியத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவைப் பங்குபற்றுமாறு அவர் கோருவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறவுள்ளார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடக்கு - கிழக்கில்...

கால் நூற்றாண்டு கால யுத்தத்திற்கு முடிவுகட்டி, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக அரசு - விடுதலைப் புலிகள் இடையே புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால், ஆயுதப்படையினர் சமாதானத்தைக் குழப்பி மீண்டுமொரு யுத்தத்தை வலிந்து இழுக்க முயற்சி செய்கின்றனர். இதனை நாம் அனுமதிக்க முடியாது.

ஆதலால் - சமாதானத்தை குழப்பி மீண்டுமொரு போர்முனையைத் திறக்க முற்படும் ஆயுதப்படையினரின் அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்தக் கறுப்புப்பட்டி இடுப்பில் அணிந்த போராட்டம் நடாத்தப்படுகிறது.

எனவே - எதிர்வரும் புதன்கிழமை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையாமலும், நாளாந்தப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமலும் இந்தக் கறுப்புப்பட்டி அணிந்து செல்லும் போராட்டம் நடைபெறவேண்டும்.

ஆகவே, பள்ளிசெல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார் அமைப்புக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள, கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், தொழிற்துறை மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களின் பணியாளர்கள், உரிமையாளர்கள், போக்குவரத்துச் சபை ஊழியர்கள், தனியார் போக்குவரத்துச் சிற்றூர்திகளின் உரிமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஆலயங்கள், தேவாலயங்களின் மதகுருமார், நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோரும் தமது அலுவலகங்களுக்கு வெளியே செல்லும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் மேலங்கியில் கறுப்புப்பட்டி அணிந்து செல்லவேண்டும் எனத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம். அதேவேளை, வாகனங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடப்படவேண்டும்.

கடந்த ஒருவருட காலமாக விடுதலைப் புலிகள் பொறுமை காத்ததனால், இந்தச் சமாதானம் இன்னும் உயிர்வாழ்கிறது. இது தொடரவேண்டுமானால், ஆயுதப்படையினரின் யுத்த நிறுத்த மீறல்களை நாம் எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

மீண்டும் மட்டக்களப்பில் நடந்தது போன்றோ, நெல்லியடியில் நடந்தது போன்றோ அல்லது மானிப்பாயில், நெடுந்தீவுக் கடற்பரப்பில், கிளாலியில் நடந்தது போன்றோ யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெறக்கூடாது என்பதே நாட்டு மக்களின் பெரு விருப்பமாகும்.

ஆதலால், நாளை புதன்கிழமை நடைபெறும், கறுப்புப்பட்டி அணிந்து செல்லும் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் முழுமையாகப் பங்களிப்புச் செய்யுமாறு வேண்டப்படுவதுடன், மாவட்டத்திலுள்ள அனைத்து பொது அமைப்புக்களும் தங்கள் தங்கள் பகுதிகளில் இதற்காக முழுவீச்சுடன் செயற்படுமாறு யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பிரசாந்த், சிம்ரன் நடித்த

ஜோடி

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி।

THE MUMMY RETURNS

(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது வாரமாக

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த



வசீகரா

10.30, 2.30, 6.30

17 முதல் 19 வரை

இரவு 9.30 மட்டும்

THE MUMMY RETURNS

(சி-545)

பாராட்டி வாழ்த்துகின்றேன்

கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றுள்ள நயினாதீவு வடக்கு (ஜே/34) முன்னாள் கிராம அலுவலரும், தற்போதைய வேலணை வடகிழக்கு (ஜே/13) கிராம அலுவலரும், சிறந்த சமய சமூகத் தொண்டருமாகிய

திருவாளர் மதியாபரணம் அம்பிகைபாகன்

அவர்களையும்

நயினாதீவு மத்தி (ஜே/35) கிராம அலுவலர்

திருவாளர் நாகநாதி கந்தசாமி அவர்களையும்

மனதாரப் பாராட்டி இவர்களது சேவை மேலும் திறம்பட ஸ்ரீ நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

நண்பன்: ச.துரைரத்தினம், 'லக்ஷனன்' பத்திரிகை முகவர், நயினாதீவு.

(சி-599)

# ஏ-9 வீதிப் புனரமைப்பைத் தொடர்ந்து குடாநாட்டு வீதிகள் திருத்தப்படும்!

## பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன்

(யாழ்ப்பாணம்)

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏ-9 வீதிப் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வீதிகளைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

குடாநாட்டிலுள்ள வீதிகள் மோசமான நிலையில் உள்ளன. இந்த வீதித் திருத்தப்பணிகள் சில வருடங்களாக மேற்கொள்ளப்படாதிருக்கின்றன. இதனால் அடுத்த கட்டமாகக் குடாநாட்டிலுள்ள வீதிகளைத் திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் மிகமோசமான நிலையில் காணப்படும் மாங்குளம் - முல்லைத்தீவு வீதித் திருத்தப் பணிகளை மேற்கொள்ளவும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இதற்கென ஜப்பானிய அரசாங்கம் வழங்கியுள்ள நிதியுதவி பயன்படுத்தப்படும் எனவும் பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

இதைவிட ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சேதமடைந்துள்ள இருநூறு பாடசாலைகளைத் திருத்தியமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மேலும் குறிப்பிட்டார். (க)

# விளையாட்டுப் பொருள் அடங்கிய உணவுப் பொதிகளுக்கு அரசு தடை

சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களை உள்ளடக்கிய உணவுப் பொதிகளைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

சிறுவர்களைக் கவர்வதற்காகவும், விற்பனையை அதிகரிப்பதற்காகவும் பல நிறுவனங்கள் தமது தயாரிப்பான உணவுப் பொதிகளில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கிவருகின்றன.

உணவுப் பொதிகளினுள் வைக்கப்பட்டுப் பொதியிடப்படும் விளையாட்டு உபகரணங்கள், சிறிய இறப்பர் பந்துகளால் சிறுவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதாலேயே அரசாங்கம் இவற்றைத் தடைசெய்ய முடிவுசெய்துள்ளது.

அண்மையில், இறப்பர் பந்து உளளடக்கப்பட்டிருந்த உணவுப் பொதி ஒன்றை வாங்கி உண்ட சிறுவன், அதிலிருந்த இறப்பர் பந்தையும் வாயினுள் போட்டு விழுங்கியதால் மரணமானார்.

இதனையடுத்து, சுகாதார அமைசசு கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அரசாங்கம் இந்தத் தடையை அமுல்செய்துள்ளது.

இத்தகைய பொருட்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் - விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய உணவுப் பொதிகள் விற்பனை செய்யப்பட்டால் தமக்குத் தகவல் தரும்படியும் சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

# பாலா கூறிய கருத்து கண்டனத்துக்குரியதாம்

## மங்கள சமரவீர கூறுகிறார்



எந்தவொரு கட்டத்திலும் புலிகள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைக் கைவிடமாட்டார்கள் என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பதாகவும், இது மிகவும் கண்டனத்துக்குரியதொரு கருத்து என்றும் தெரிவித்திருக்கிறார் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்து வருவதாகவும், இராணுவத்தினர் தப்பி ஓடிக்கொண்டிருப்பதாகவும் - இதனால் புலிகள் பலமடைந்து வருகின்றனர் என்றும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியதாக மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

# இன்று பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் - நாட்டின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் நடந்து வருவதாகக் கூறியே எதிர்க்கட்சிகள் அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளன.

திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளதால், தமது அரசாங்கத்தில் இணைந்துள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இக்கூட்டத் தொடரில் கட்டாயமாகப் பங்கேற்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உடன் நாடு திரும்புமாறு பிரதமர் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து மெக்காவில் ஹஜ் கடமைக்காகச் சென்றிருந்த அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம் அஸ்வர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.எம்.காதர், ம.்.ரூப் ஆகியோர் நேற்றுமுன்தினம் அவசரமாக நாடு திரும்பியுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலை வகிக்கவும், ஈ.பி.டி.பி., புளொட் என்பன எதிர்த்து வாக்களிக்கவும் தீர்மானித்திருப்பதாக தெரியவருகின்றது.

# அரச, தனியார் கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும்

## வவுனியா கூட்டத்தில் வலியுறுத்து

வவுனியா மாவட்டத்திலுள்ள அரச, தனியார் கட்டடங்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உள்ளூர் உறுப்பினரான எல்.அப்துல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கண்காணிப்புக் குழுவின் உள்ளூர் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் -

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் வீடுகள், விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன், வவுனியாப் பகுதியில் படையினரின் பாலியற் குற்றச்செயலகளும் அதிகரித்துள்ளன எனவும்- கண்காணிப்புக் குழுவின் உள்ளூர்ப் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வன்னி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால - மேற்படி விடயங்களைத் தான் கவனத்தில் எடுப்பதாகவும், இராணுவத்தினர் அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவர் எனவும் தெரிவித்தார்.

# ரத்வத்தவின் கண்டி வீட்டில் ஏராளமான துப்பாக்கிகள்

## நேரில் கண்டதாக இராணுவ அதிகாரி சாட்சியம்

2001 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் வீட்டுக்குச் சென்றபோது, அங்கு பெருமளவிலான ரி-56 ரகத் துப்பாக்கிகளையும், வெடிபொருட்களைக் கண்டதாகக் கண்டிப் பகுதி இராணுவக் கட்டளை அதிகாரியான மேஜர் கருண உபுல் சனத் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

கண்டி உடதலவின்னவில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக நடைபெற்றுவரும் வழக்கு விசாரணைகளில் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜெனரல் ரத்வத்தவின் உத்தரவின் பேரில் மகியாவவில் உள்ள அவரது வீட்டுக்கு காவலில் ஈடுபடுவதற்காக லெப். விஜேரட்ண தலைமையிலான இராணுவ அணி ஒன்றை அனுபபி வைத்ததாகவும், லெப். விஜேரட்ணவே தனக்கு ரத்வத்த வீட்டில் ஏராளமான ஆயுதங்கள் இருந்ததைக் கூறியதாகவும் தெரிவித்தார்.

பின்னர், தான் சென்று பார்த்தபோது, ரி-56 ரக துப்பாக்கிகள், வெடிபொருட்கள் இருந்ததைக் கண்டதாகவும், ஒரேநாளில் நூற்றுக்கும் அதிகமான வாகனங்கள் அந்த வீட்டில் தரித்திருப்பதை அவதானித்ததாகவும் மேஜர் அத்துலத் முதலி தனது சாட்சியத்தின்போது தெரிவித்திருந்தார்.

### ரணில் விசேட உரை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு உடன்படிக்கையின் முதலாவது வருடப் பூர்த்தி தினத்தன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 22 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிககை கைச்சாத்தாகி ஒருவருடம் பூர்த்தியாகின்றது. இதனையொட்டி அரசாங்கம் சமாதானத் தீபமேற்றும் நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொ.ஐ.மு. அரசில் தொண்டமானுக்கு முக்கியமான அமைச்சுப் பொறுப்பு!

## அநுரா பண்டாரநாயக்க தகவல்

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைப் பிடித்ததும் அதில் ஆறுமுகன் தொண்டமானுக்கு முக்கியமான அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் 33 ஆவது தேசிய மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அநுரா பண்டாரநாயக்க இதனைத் தெரிவித்தார்.

விரைவில் புதிய அரசாங்கத்தைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைக்கவுள்ளது. இந்த அரசாங்கத்தில் ஆறுமுகன தொண்டமானுக்கு முக்கியமான அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### சமையல் வாயு விலை அதிகரிப்பு

சமையல் வாயுவின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து 67 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்திருப்பதாக ஷெல் காஸ் நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

இந்த அதிகரிப்பின்படி ஒரு சிலிண்டர் சமையல் வாயு இனிமேல் 665 ரூபாவாக விற்கப்படும்.

### ஆபத்தான நிலையில் மாணவன்

கேகாலையில் 18 வயதுப் பாடசாலை மாணவன ஒருவன, சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைக்குட்படுத்தப்பட்டு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த இந்த மாணவன் 20 சிரேஷ்ட மாணவர்களால் தாக்கப்பட்டதாகத் தெரியவந்திருக்கிறது. 250 ரூபா தரும்படி சிரேஷ்ட மாணவர்கள் இந்த மாணவரைக் கேட்டதாகவும், அதற்கு மாணவன் மறுக்கவே அவரைச் சிரேஷ்ட மாணவர்கள் கடுமையாகத் தாக்கியதாகவும் தெரியவருகிறது.



கொழும்பு நகரில் நூற்றுக்கு மேற்பட்ட யானைகளின் உரிமையாளர்கள், தமது யானைகளுடன் கடந்த 16 ஆம் திகதி, காட்டு விலங்குகளைச் சமய நிகழ்வுகளுக்கு பயன்படுத்தும் விவகாரம் தொடர்பாக நடத்திய பேரணி இது.



அண்மையில் கொழும்பு ஜோன் டீ சில்வா அரங்கில் கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட கலாபூஷண விருது விழாவில் தமிழ்க்கலைக் காவலன், கலைஞானகேசரி செல்லையா மெற்றாஸ் மயிலுக்கு கலாபூஷண விருதினை, இந்து கலாசார அமைச்சின் செயளலாளர் க.பரமேஸ்வரனும், மேலதிகச் செயலாளாலர் க.பரமலிங்கமும், திணைக்களப்பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசும் ஒருங்கிணைந்து வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கோடி ரூபா திட்ட நிதி

(கொழும்பு)

பன்முக வரவு-செலவுத் திட்டத்தின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி - இந்த வருடம் தொடக்கம் இரண்டாண்டுத் திட்டத்தின் கீழ் செலவிடப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இப்போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 50 லட்சம் ரூபா வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படடு வருகின்றது. இந்தத் தொகை இரண்டாண்டுத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாவாக வழங்கப்படும் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

# வாழ்க வளமுடன்


## நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்


ஆறாவது அகவையில் HAPPY BIRTHDAY




பெயர் :சி.நிசங்கா
முகவரி: முருகன் கோவிலடி,
நெல்லியடி.

ஏழாவது அகவையில்





பெயர் :த. தர்ஷன்
முகவரி: மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

## புண்ணிய நாச்சியம்மையார் தினம்

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினர் நடாத்தும் புண்ணியநாச்சியம்மையார் தினம் இன்று காலை 9 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பரிபாலனசபைத் தலைவர் இ.மகேநதிரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலாபூஷணம் ஆர்.திருஞானசம்பந்தன் கலந்துகொண்டு - போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்.

## யாழ்.வலய அதிபர்களுக்கு முக்கிய கூட்டம்

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம், இன்று மாலை 2 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாதான தினம் குறித்து முக்கியமாக கலந்துரையாடவிருப்பதாகவும் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார். (க)

## ஒரே நாளில் 19 திருமணங்கள்

தொண்டமனாறு - செல்வச்சந்நதி ஆலயத்தில் சென்ற புதன் கிழமை காலை 8 மணிமுதல் 10.30 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் 19 திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

இதுவரை காலமும் இப்படிப் பெருந்தொகையான திருமணங்கள் நடைபெற்றது இதுவே முதற்தடவையெனக் கூறப்படுகிறது.

## ஒவ்வொரு பாடத்துக்கும் தனித்தனியாகப் புள்ளிகள்

பல்கலைக்கழக அனுமதிக்கான இசற் ஸ்கோர் நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும், பரீட்சைத் திணைக்களம் ஒவ்வொரு பாடத்துக்குமான புள்ளிகளைத் தனித்தனியாக வெளியிட வேண்டுமெனவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 23

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நாயை வெளியே கொண்டுசெல்வதனால், நாயின் வாய்க்கு வாய் மூடி அணிந்து, நாயின் கழுத்தில் நாய்ச் சங்கிலியை முறைப்படி கட்டி, அச்சங்கிலியைக் கையில் பிடித்து அல்லது, நாய் வெளியே வரமுடியாத காற்றோட்டமுள்ள பெட்டி ஒன்றில் நாயை அடைத்துக்கொண்டு செல்ல வேண்டும். நாய் மலத்தைச் "செப்ரிக் ராங்க்" இற்குள் கொட்டவேண்டும். இதற்குச் சிறப்பான அமைப்புகளை ஏற்படுத்தவேண்டும். அல்லது இதற்கெனத் தனியான 'செப்ரிக் ராங்க்' அமைப்பது உகந்தது. உள்ளூராட்சி மன்றங்கள் உரிமத்தகடு வழங்குவது, நாய்களை வீதிகளில் மலங்கழிப்பதற்கு வழங்கப்படும் அனுமதி எனத் தவறாக எண்ணக்கூடாது.

நாய் உரிமையாளர் சங்கிலியால் பிணைத்துத் தம்முடன் வைத்திருக்காத, உரிமத்தகடு கட்டப்பட்ட, உரிமைத்தகடு கட்டப்படாத சுதந்திரமாகத் திரிகின்ற நாய்கள் அனைத்தும் கட்டாக்காலி நாய்களாகவே கருதப்பட்டுச் சுகாதார அதிகாரிகளினால் கொல்லப்படும் என்பதை அறிந்திருக்க வேண்டும். நாய்கள் மனிதருக்குப் பயங்கர நோய்களை ஏற்படுத்தக்கூடியவை என்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் உணர வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் நாய் உரிமம் வழங்கும்போது, மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கடைப்பிடிப்பேன் என்ற உறுதிமொழியை எழுத்து மூலம் நாய் உரிமையாளரிடம் பெற்ற பின்னரே, நாய் உரிமம் வழங்க வேண்டும். இவ்வாறு செய்யாவிடில் உரிமம் பெற்ற நாய்களினால் கடிக்கப்படுவோர் உரிமம் வழங்கிய உள்ளூராட்சி மன்றத்தில் வழக்குத் தொடரும் போது பொறுப்பேற்கக் கோரலாம். விரைவில் அமையப் போகும் நீரிழிவுச் சங்கம் இத்தகைய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மலச்சிக்கலுக்குத் தவறான மருந்துகளைப் பயன்படுத்தல்**

நீரிழிவு நோயாளிகள் அதிக சிறுநீர் கழிவதைத் தொல்லையாகக் கருதி, போதியளவு நீர் பருகுவதில்லை. அத்துடன், தாராளமாக இலை உணவுகளை ஒவ்வொருவேளை ஆகாரத்திலும் சேர்க்கவேண்டும் என்பதைக் கவனத்திற்கெடுக்காது அலட்சியம் செய்வதும், மலச் சிக்கலுக்குப் பிரதான காரணங்களாகும். குடல் அசைவைத் தூண்டும் நரம்புகள் திறன் இழப்பதும், குடல் தசைகளின் அசையும் ஆற்றல் குன்றுவதும், வேறு சில காரணங்களாகும்.

சூடு ஆறிய தண்ணீரைத் தாராளமாகக் குடிப்பதுடன், (வைத்தியரிடம் ஆலோசனை கேட்கும்போது அவர்கள் **DUPHALAC, FIBOGEL, NORMAKOL, LIQUID PARAFINM** போன்றவற்றுள் ஒன்றில் குறிப்பிட்ட அளவைச் சிபார்சு செய்வதுண்டு. வைத்தியர் விதந்துரைத்தபடி அவற்றைக் குடிப்பதுடன்) நார்ப்பொருள் நிறைந்த உணவுகளையும் உண்டால் மலச் சிக்கல் நீங்கும். சிலர் இதை விடுத்து "மலச்சிக்கல் இல்லா வாழ்க்கையே குறைவற்ற செல்வம்" எனக் கூறிக்கொண்டு கண்ட கண்ட மருந்துகளையெல்லாம் பயன்படுத்துவது ஆபத்தானதாகும். சிலர் அம்பிசிலின், அமொக்சிலின் போன்ற மருந்துகளை எப்பொழுதாவது உபயோகித்தபோது அந்த மருந்தின் பக்க விளைவாக (வேண்டா விளைவாக) இளகிய மலம் கழிந்ததை அவதானித்து விட்டு, மலச்சிக்கலுக்கு இவற்றைப் பயன்படுத்துகின்றனர். சக்தி வாய்ந்த இந்த நுண்ணுயிர் கொல்லிகளான இந்த மருந்துகளை மலச்சிக்கலைப் போக்கப் பயன்படுத்தவே கூடாது. இந்த மருந்துகளுக்கு எதிர்ப்புச் சக்திகொண்ட நுண்ணுயிர்களின் விருத்திக்கு இந்த நடவடிக்கை வழிவகுக்கும் என்பதை உணரவேண்டும்.

(தொடரும்)



நமது ஈழநாடு வழங்கும்




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **இரத்தினம்ஸ்**
[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]
30, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்
அசோசியேட்டட் மோட்டார் வெய்ஸ்ஸின் (AMW) அங்கீகரிக்கப்பட்ட யமஃகா, மோட்டார் சைக்கிள்கள், வெளி இணைப்பு இயந்திரங்களின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: **1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



**2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்பாட்**
531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது?
(.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது?
(.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன?
(.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்?
(.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது?
(.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------------
வயது: ------------------------------------------
முகவரி: ------------------------------------------
------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

## அங்கம் - 20




1932 ஜுனில், சார்லி மீண்டும் ஹொலிவுட்டுக்குத் திரும்பினார். அப்போது அவருக்கு வயது நாற்பத்திமூன்று. பயணங்களில் அவர் சந்தித்த கொடுமை

# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த

# சார்லி சாப்ளின்

களினாலும், வேதனைகளினாலும் நிறையவே கலங்கிப் போயிருந்தார். சர்வதேசப் பிரச்சினைகளான வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, அநீதி இவற்றை ஒழிக்க பொருளாதார அடிப்படையில் திட்டம் ஒன்றை உருவாக்க முயன்றார். பிரச்சினைகளில் இருக்கும் சிக்கல்களை புரிந்துகொள்ளும் அளவிற்கு அவருக்கு விவரம் தெரிந்திருக்கவில்லை. அதனால் அவருடைய திட்டம் செயற்பட்டிருக்க முடியாது.



ஆனால், அவரால் முடிந்த செயலாக, ஒரு திரைப்படத்தை உருவாக்கினார்.

ஆக அவருடைய அடுத்த படம் 'மொடேர்ன் ரைம்ஸ்'. இந்தப் படத்தில் மக்களைவிட பணத்தை மதிக்கும் உலகத்தில் மாட்டிக் கொள்கிறான் நாடோடி. பெரிய இயந்திரத்தின் பல்சக்கரங்களாக மக்கள் நடத்தப்படுகிறார்கள். இறுதியில் நட்புடன் பழகிவிட்ட ஒரு அநாதையுடன் அங்கிருந்து தப்புகிறான்.

வழக்கம்போல் இந்தப் படமும் நகைச்சுவையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் வேலையில்லாத ஐந்து மில்லியன் மக்களுக்குச் சார்லியின் பதிலாகவும் இருந்தது. முந்தைய படங்களில் நாடோடி ஏழையாக இருந்தான். ஆனால் 'மொடேர்ன் ரைம்ஸில்' போராட்டங்களையும், தொழிற்சாலைச் சூழ்நிலையையும் குறைந்த ஊதியம் அல்லது வேலையின்மையையும் சமாளித்து வாழும் கோடிக்கணக்கான சாதாரண மனிதர்களுள் ஒருவனாக வருகிறான்.

சில வருடங்களுக்குப் பிறகு, சார்லி ஒரு கம்யூனிஸ்ட் என்று நிரூபிக்க, 'மொடேர்ன் ரைம்ஸ்' அத்தாட்சியாகப் பார்க்கப்பட்டது.

இந்தப் படத்தில் அனாதையாக நடித்த பௌலட் கோடார்ட் என்ற பெண்மேல் காதல் கொண்டார் சார்லி. அவர்களிருவருக்கும் திருமணம் நடந்தது.

சார்லியுடன் வாழ்க்கை நடத்துவது சுலபமல்ல. சிறு விஷயங்களுக்கும் கோபம் வந்துவிடும். பௌலட் புத்திசாலி, திறமைசாலி. சார்லியுடன் வாழ்வது முடியாதென்று கண்டறிந்திருக்க வேண்டும். திரைப்பட உலகில் தனக்கென்று ஓரிடத்தை அவள் மெதுவாக ஏற்படுத்திக் கொண்டாள். ஏழு வருடங்களுக்குப் பிறகு, 1942 இல் சாப்ளினின் மூன்றாவது திருமணம் முடிவுக்கு வந்தது.

1938 ஆம் ஆண்டு, சார்லி கூறியது உண்மையானது. போர் வரவிருந்தது. ஜேர்மனியில் அடோல்ப் ஹிட்லரின் தலைமையில் நாஸி கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. "இனங்களைத் தூய்மைப்படுத்தும்" திட்டப்படி சிறுபான்மையினர், முக்கியமாக யூதர்கள் கொல்லப்பட்டார்கள். மாபெரும் பொதுக் கூட்டங்களில் ஜேர்மனியர்களை நாட்டுப் பற்று வெறிகொள்ளத் தூண்டிக்கொண்டிருந்தார் ஹிட்லர்.

அதிசயமாக, ஜேர்மனிக்குள் நடப்பது, வெளியிலிருக்கும் பலருக்குத் தெரியவில்லை. பலர் ஹிட்லரைப் பயங்கர வெறியனாகப் பார்க்காமல், திக்கிப் பேசும் கோமாளியாகத்தான் நினைத்தார்கள். சார்லியே ஜேர்மனியிலும், ஸ்பெயினிலும் நடைபெறும் சம்பவங்களைக் கண்டு மிகவும் கவலைப்பட்டார்.

1938 அக்டோபரில் அவர் 'த கிரேட் டிக்டேட்டர்' என்ற படத்தின் வேலையைத் துவக்கினார். இதில் ஈர்ப்புத் தன்மைமிக்க ஹிட்லரின் புகழினால் ஏற்படக்கூடிய அபாயங்களைச் சுட்டிக்காட்டி, உலகுக்கு எச்சரிக்கை விடுத்தார். அவர் சர்வாதிகாரி 'ஹென்கெல்'லாகவும், யூதர் இனத்தைச் சேர்ந்த தையற்காரனாகவும் இரண்டு வேடங்களில் நடித்து, ஹிட்லரையும் ஏளனம் செய்தார். மௌனமொழியும், காட்சிகளை செம்மைப்படுத்தும் நாட்களும் முடிந்துபோயின. இதில் சரியான திரைக்கதையும், ஒலியும் இருந்தன.

இந்தப் படத்தில் அருமையான நகைச்சுவைக் காட்சிகள் இருந்தன. ஆனால் சார்லிக்கு, தான் பேசவேண்டும் என்று தோன்றியது. ஹென்கெல்லுடன் இடம் மாற்றிக்கொள்ளும் தையல்காரன் ஒரு நீண்ட பிரசங்கத்தில் படைவீரர்களை தங்கள் சுயநினைவிற்கு திரும்புமாறு வேண்டுகின்றான். "நாம் ஒரு காரணத்துடனான உலகிற்காக போராடுவோம். அந்த உலகத்தில் விஞ்ஞானமும், முன்னேற்றமும் எல்லா மனிதர்களின் மகிழ்ச்சிக்கும் வழிவகுக்கும். படை வீரர்களே! குடியாட்சியின் மேல் ஆணையாக நாம் ஒன்றுபடுவோம்."

ஆனால், இது உபயோகமில்லாமல் போனது. 1940 இல் இந்தப்படம் திரையிடப்பட்டபோது, ஐரோப்பா முழுவதும் போர் பரவியிருந்தது. நிகழ்வதையெல்லாம் இந்த உலகமே புரிந்துகொண்டிருந்தது.

அதுவரை ஐரோப்பாவில் ஏற்பட்டிருந்த மோதல்களில் அமெரிக்கா இழுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் 1941 டிசம்பர் 7 ஆம் தேதி ஜப்பானியர்கள் பேர்ள் துறைமுகத்தைத் தாக்க, அமெரிக்காவும் போரில் கலந்துகொள்ளவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

(அடுத்தவாரம் தொடரும்...)

# விலங்கினங்களுக்கும் ஆபத்தாகும்



ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் மனிதனுக்கு மட்டுமல்ல, அப்பாவி விலங்கினங்களுக்கும் பேராபத்தைத் தரப் போவதாகச் சர்வதேசப் பறவைகள் காப்பகம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எச்சரிக்கை மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

பேரழிவு ஆயுதப் பிரயோகம், கடலில் எண்ணைக் கசிவு கலத்தல், கதிர்வீச்சுத்தாக்கம்

# ஈராக் மீதான போர்



என்பன மனிதனுடன் இந்த விலங்கினங்களையும் பூமியிலிருந்து மறையச் செய்துவிடும் என எச்சரித்துள்ள காப்பகம், 1991 வளைகுடாப்போரில் அழிவுண்ட விலங்கினங்களினதும், இயற்கைச் சமநிலையினதும் முழுவிபரங்களையும் வெளியிட்டுள்ளது. சக மனிதனைப் பற்றியே சிந்திக்கா மனிதனுக்கு இந்த அப்பாவி உயிரினங்கள் எம்மாத்திரம்?

# கையடக்க டெக் - திரையுடன்



1964 இல் அறிமுகமான - தற்போது அதிகமான பாவனையில் உள்ள **VHS** வீடியோ பதிவுக் கருவிகள் (டெக்) உருமாறி, பின் **DVD** என்ற டிஸ்க் **recorders** ஆக மாறின. இவையும் இப்போது உருமாறி கையடக்க பி.வி.ஆர் என (Personal Video Recorders) வடிவெடுத்துள்ளன.

கையடக்கமான இக்கருவிகள் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைக் கொண்டவை. பல மணி நேரதுக்கு எமக்குப் பிடித்த நிகழ்ச்சிகளை இதில் பதிவு செய்யலாம் என்பது இதன் வரப்பிரசாதம். பதிவு செய்தவற்றை இதில் உள்ள திரையிலேயே மீண்டும் பாாக்கலாம்.

# மடகஸ்கார் பாலூட்டிகள் புலம்பெயர்ந்து வாழ்பவை



தென்னாபிரிக்காவிற்குக் கிழக்கேயுள்ள தனித்தீவு நாடான மடகஸ்காரில் காணப்படும் அனைத்து பாலூட்டி இன விலங்குகளும், ஆபிரிக்காவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து - கடல் கடந்து - மடகஸ்கார் தீவு சென்று வாழ்பவையே என்பது கண்டறியப்பட்டுள்ளது. 88 மில்லியன் வருடங்களுக்கு முன் மடகஸ்கார், ஆபிரிக்க பிரதான நிலப்பகுதியிலிருந்து புவியியல் மாறுபாட்டினால் துண்டாகி - விலகிச் சென்ற - தனியான ஓர் தீவாகும். இங்கு சுமார் 100 இனங்கள் தனித்துவமாக வாழ்கின்றன. இவை பிரதானமாக நான்கு வகையில் அடங்கும். ஊண் உண்ணிகள், lemurs, எலியினங்கள், பூச்சிகளை உண்டு வாழும் **tenrecs** என்பனவே அவையாகும்.

சரி இவை எப்படி மடகஸ்காரை 250 மைல் தூரக் கடலைக்கடந்து சென்றடைந்தன? சிக்காகோ களஆய்வு தொல்லியல் நிறுவனத்தின் குழுவினர் செய்த ஆய்வில் இந்த கேள்விக்குப் பதில் கிடைத்தது. மிதக்கும் கட்டைகள், மரங்கள் என்பவற்றின் உதவியுடன் பல ஆண்டுகளுக்கு முன் இவை கடல்கடந்து மடகஸ்கார் சென்றடைந்தனவாம்.



தென்துருவ அந்தாட்டிக் பனிக் கண்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பழமையான பெறுமதி வாய்ந்த கட்டடம் ஒன்று பென்குயின் பறவைகளால் சேதமாகிவருகிறது.


1899 ஆம் ஆண்டு அந்தாட்டிக் சென்ற நோர்வே ஆய்வாளர், இந்தச் சிறிய தங்குமிடக் கட்டடத்தை அங்கு அமைத்திருந்தார். அந்தாட்டிக் பனியை எதிர்கொண்டு, பல தசாப்தங்களாக அங்கு நிமிர்ந்து நின்ற இக்கட்டடம் - இப்போது பென்குயின் பறவைகளினால் சிறிது சிறிதாகச் சேதமாகி வருகிறது. இப்பகுதிக்கு வரும் பென்குயின்கள் கட்டடச் சுவர்ப் பகுதியைச் சேதமாக்குவதாகவும், இதனால் கட்டடம் பனிப்புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள முடியாது சேதமுற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டடத்தைப் புனரமைக்கப் பெருமளவு நிதி தேவை என்பதால் ஐ.நா. உதவியும் கோரப்பட்டுள்ளது.

# அந்தாட்டிக்கின் பழமையான கட்டடம் பென்குயினால் அழிகிறது


# தாமதிக்கா கடிகாரம்!

100 மில்லியன் வருடத்திற்கு ஒரு செக்கன் மட்டுமே தாமதமாகும் புதிய தொழில்நுட்ப அணுஇயக்கக் கடிகாரத்தை அமெரிக்க ஆய்வாளர்கள் தயாரித்து வருகின்றனர். இக்கடிகாரத்தின் தொழில்நுட்பம், தொலைத்தொடர்புத் தொழில்நுட்பம், பௌதீகவியல் நுட்பம் என்பவற்றின் கலவையாக இருக்கும். இதற்கு Optical Atomic Clocks எனப் பெயரிடப்பட்டுள்ளது.



# திரை விமர்சனம்

## ஆல்பம்



தமிழில் தலைப்பிட முடியாத பஞ்சநிலை தமிழகத்துக்கு! திரைப்படத்தை ஓரளவிற்கேனும் தூக்கி நிறுத்துவது கதாநாயகி - புதுமுக நடிகையான ஸ்ருதிகா மட்டுமே. அவரின் இயல்பான நடிப்பு சொல்லும்படியாக இருக்கிறது. இவரின் நடிப்புக்கு ஈடாக கதாநாயகன் ராஜேஷ் இல்லை.

கார்த்திக் ராஜாவின் 'செல்லமாய் செல்லம்' என்ற பாடலைத் தவிர மற்றைய பாடல்கள் அனைத்தும் மனதில் பதிவதாக அமையவில்லை. விஜயகுமார் மற்றும் பாலச்சந்திரமேனன் ஆகியோரின் குடும்பங்கள் அருகருகே நட்புடன் வசிக்கின்றன. இரு குடும்பங்களிலும் உள்ள இளவயதினரான ராஜேஷ் - ஸ்ருதிகா காதல் வயப்படுகின்றனர். கடும் கம்யூனிஸ சித்தாந்தவாதியான கதாநாயகன், தந்தையால் கண்டிக்கப்பட - கோபங்கொண்டு, வேலைதேடிச் சென்னை செல்கிறார். ஒரு கட்டத்தில் தம்மீது அதீத பாசம் வைத்திருக்கும் தமது பெற்றோருக்காகத் தம் காதலைத் துறக்க முடிவு செய்கின்றனர் ராஜேஷ் - ஸ்ருதிகா ஜோடி. ஸ்ருதிகாவுக்கு வேறு ஒருவருடன் திருமணம் பேசப்படுகிறது. தொடர்ந்து நடப்பது படத்தின் கிளைமாக்ஸ் காட்சிகள்.

ராஜேஷ் தனது இளைய தங்கையுடன், அடிக்கடி சிறிய சண்டைகள் பிடிப்பதும், தனது பூப்புனித நீராட்டு விழாவுக்கு அண்ணன் வராமையைக் கண்டு, அவன் தங்கை மௌனமாக அழுவதுமான யதார்த்தமான காட்சிகளில் இயக்குநர் முத்திரை பதித்துள்ளார். எனினும், திரைப்படத்தின் பெரும்பான்மையான இடங்கள் யதார்த்தமற்ற காட்சிகளாலேயே நிரப்பப்பட்டுள்ளன.

நகைச்சுவை நடிகர் கருணாசைச் சரியான விதத்தில் இயக்குநர் பயன்படுத்தவில்லை. சிறிய கரு, தவழ்ந்து நகரும் கதைவேகம், சில யதார்த்தமான காட்சிகள் இவற்றின் கூட்டே ஆல்பம்.

- துஷி -

## டோலி ஆடு மரணம்!




உலகின் முதல் குளோனிங் மிருகமான 'டோலி' என்ற பெயருடைய ஆடு மரணமடைந்துவிட்டது. இந்த குளோனிங் ஆட்டை உருவாக்கிய ஸ்கொட்லாந்து ஆய்வு மையம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஆறுவயதான டோலி, நுரையீரலில் ஏற்பட்ட பாதிப்பினாலேயே மரணமடைந்ததாகக் கூறப்படுகின்றது. சாதாரணமாக இந்த இன ஆடுகள் 12 வருடங்கள் உயிர்வாழக் கூடியன. ஆடுகளுக்கு நுரையீரல் நோய்கள் வருவது சாதாரணம். எனினும், பிரேதபரிசோதனையில் பலமுக்கிய தகவல்கள் கிடைக்கும் என நம்புவதாக ஆய்வுமையத்தின் வைத்தியர் ஹரிகிறிபின் கூறுகின்றார்.

# வாரம் ஒரு யோகாசனம்

## 04. புஜங்காசனம்



புஜங்காசனம் செய்யும் விதம் - ஆறு அடி நீளமான விரிப்பை விரித்து முகம் குப்பறப்படுத்துக்கொண்டு, கைகளை மடக்கி, உள்ளங்கைகள் நிலத்தில் பட விரல்கள் முன் பார்த்தபடி நிலத்தில் படியவைத்து படுக்கவேண்டும். கால்களைக் பின்னால் நீட்டிக் குதிககால்கள் அணைத்தடி புறங்கால்களை நிலத்தில் படியவைக்க வேண்டும். படுத்துக்கொண்டு பின்பு பாம்பு படம் எடுப்பதுபோல, முன்பகுதியை எழுப்பி இடுப்புப் பகுதி நிலத்தில் படிந்திருக்க வேண்டும். அடி வயிறும் நிலத்தில் படப் படிந்திருக்க வேண்டும். நிலத்தை விட்டு மேலே எழும்போது சுவாசத்தை மெதுவாக உள்ளிழுக்க வேண்டும். ஆறு எண்ணும் வரை உள்ளிழுத்தபடி நிற்க வேண்டும். சுவாசம் வெளியில் விட்டபடி நிலத்திற்கு வரவேண்டும். இந்தவிதமாக 10 தடவைகள் செய்தல் வேண்டும்.

### புஜங்காசனத்தின் நன்மைகள்

புஜங்காசனம் முக்கியமாக முதுகெலும்பு வளையாது பாதுகாக்கும். கூன், முதுகு வலி, இடுப்பு வலி முதலியன குணமடைகின்றன. நடுவயிறு அதிகரித்து மலத்தைக் குதத்திற்குக் கொண்டு வருகின்றது. எனவே மலச்சிக்கலை அப்புறப்படுத்துகின்றது. இது சரீர உஷ்ணத்தை அதிகரிக்கச் செய்து பல பிணிகளையும் இல்லாதாக்குகிறது. மூலாதாரச் சக்கரத்தில் உறங்கிக் கிடக்கும் குண்டலினியை இது தட்டி எழுப்புகின்றது. நல்ல பசியை அளிக்கின்றது. பெண்களிற்கு அநேக நன்மை அளிக்கின்றது. ஊழைச் சதைகள் கரைந்து, பெருந்தொந்திகள் குறைகின்றது. பெண்ணின் சினைப்பைக் கற்பாசனங்களைப் பலப்படுத்துகின்றது.

மாதவிடாய் ஆகாமை, மிகுந்த நோவுடனும் கஷ்டத்துடனும் கூடிய மாதவிடாய், மேகவெட்டை. மற்றும் பல்வேறு வியாதிகளையும் குணப்படுத்தவல்லது. இவ்விடயங்களில் சீரிய முறையில் இரத்தோட்டத்தை நிலைக்கச் செய்வதுடன், பிரசவங்கள் சாதாரணமாகவும் சுகமாகவும் அமையச்செய்யும்.

கற்றுத்தருபவர்
**மா.மகாநேசன்** (கரவெட்டி)

# பிள்ளைகளின் மனநிலையை புரிந்துகொள்வது எப்படி?

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள உறவைப் பற்றிச் சிந்திக்கும்போது, இந்த உறவு தொடங்குவது பெற்றோரின் பக்கத்திலிருந்தே என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்த உறவு நன்றாக இருக்க வேண்டுமானால் பிள்ளைகளின் மனவளர்ச்சி பற்றிப் பெற்றோருக்கு அறிவு தேவை. சாதாரணமாகப் பிள்ளைகளின் சரீர வளர்ச்சி பற்றி டாக்டரிடம் கேட்டு அறிவைப் பெருக்கிக் கொள்வர் பெற்றோர்கள். ஆனால், மனவளர்ச்சி பற்றிய அறிவையும், தாம் வளர்த்துக் கொள்வது முக்கியம் என்பதைப் பெற்றோர்கள் உணர்வது குறைவாகும்.

பிள்ளையின் மனவளர்ச்சி பற்றி அறிவதற்கு முன்பு நான் என்னைப் பற்றிய சுய அறிவை வளர்த்துக் கொள்வது முக்கியம். எனக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது? நான் ஏன் இப்படிச் செயற்படுகின்றேன்? எனது சுபாவம் என்ன? எனது திறமைகள் எது? போன்றவற்றில் சுயஅறிவு தேவை. சுய அறிவை வளர்த்துக் கொண்டவர்கள் மற்றவர்களோடு நல்ல தொடர்பை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள்.



பிள்ளைகளது மனநிலையைப் புரிவது எப்படி? குழந்தை பிறப்பதற்கு 280 நாட்களுக்கு முன் கர்ப்பப்பையுடன் இருக்கும் பலோப்பியன் நாளத்தில் ஆணின் உயிரணுவும், பெண்ணின் கருவும் சேர்ந்த நேரத்திலிருந்து உயிர் உருவாகத் தொடங்கிவிடுகிறது. பிள்ளைக்கு இந்தக் கணத்திலிருந்து அன்பு தேவைப்படுகிறது. அன்பு என்பது தீர்மானம், அர்ப்பணமாகும். பெற்றோர் பிள்ளைக்காக வாழத் தீர்மானம் எடுக்க வேண்டும்.

பெற்றோருக்குத் தேவைப்படும், பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்படும் பிள்ளையாக வயிற்றிலிருந்தே உருவாக வேண்டும். இல்லையேல் பிள்ளையின் மனவளர்ச்சி குறையத் தொடங்கும். எதிர்பாராத நேரத்தில் பிள்ளை உருவாகி விட்டதே என்று வெறுப்புணர்ச்சி கொண்டால் அது பிள்ளையின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். ஆகவே எமது எண்ணத்தை மாற்றி, அன்போடு ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும். அதேபோன்று தாயின் மனநிலை, பிள்ளையின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். தாய் கவலையாய், வேதனையாய், பயமாய் மனதில் பெரும் கஷ்டப்பட்டால் அது வயிற்றிலிருக்கும் பிள்ளையின் மனநிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். சிலர் தமது பிள்ளை வெள்ளையாகப் பிறக்க வேண்டும் அல்லது கறுப்பாகப் பிறக்க வேண்டும் அல்லது பெண்ணாக அல்லது ஆணாகப் பிறக்கவேண்டும் என எதிர்பார்ப்பர். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாகப் பிறந்தால் பிள்ளையைப் புறக்கணிப்பர். இது தவறு. அதை விடுத்து பிள்ளை எப்படிப் பிறந்ததோ, அந்த நிலையில் பிள்ளையை ஏற்றுக்கொள்ளப் பழகவேண்டும். இன்று அதிகமானோர் தமது வயிற்றிலுள்ள பிள்ளையைக் கருச்சிதைவு செய்கின்றனர். உயிர் இறைவனுக்குச் சொந்தம். அதை அழிக்கும் உரிமை இறைவனுக்கே சொந்தம். மூன்று கிழமைகளில் குழந்தையின் இதயம் அடிக்கத் தொடங்கும். இதனால் வயிற்றிலுள்ள குழந்தையின் இதயத் துடிப்பைச் சில கருவிகள் மூலம் பெற்றோர் கேட்கச் செய்கின்றார்கள் சில டாக்டர்கள். அதன்பின் கருவைக் கொலைசெய்யும் எண்ணத்தைப் பல பெற்றோர்கள் கைவிட்டும் உள்ளார்கள்.

தாயின் சரீர, மனநிலை பிள்ளைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் வயிற்றில் குழந்தை உருவாகியதும் தாய் தனது உடல் நிலையையும், மனநிலையையும் கவனத்தில் கொள்ள வேண்டும். சத்துள்ள ஆகாரம், இளைப்பாறுதல் போன்றவற்றைக் கவனிப்பதோடு மனதில் சந்தோசத்தை ஏற்படுத்தும் சூழலை ஏற்படுத்த வேண்டும். கர்ப்பந்தரிப்பது நோயல்ல. கர்ப்பந்தரித்த பின் வைத்தியரிடம் வைத்திய ஆலோசனைக்காகச் செல்வது நோய் வந்துவிட்டது என்பதாலல்ல. தாயின் சரீர சூழலைக் குழந்தைக்கு ஏற்படுத்திக் கொள்ளவேயாகும். முன்பு வீட்டில் குழந்தை பெறுவர். வீட்டில் நல்ல வசதியிருப்பின் தாதியின் உதவியுடன் வீட்டில் பெறலாம். வைத்தியசாலைக்குச் செல்வது வசதிகள் இருப்பதாலேயே என்ற மனநிலையை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். பிறந்ததும் இரண்டு நாளில் வீட்டுக்கு வரலாம். நோய் இருந்தால் மட்டும் வைத்தியசாலையில் தங்கவேண்டும். பிரசவத்தைப் பற்றித் தாயிடமுள்ள மனநிலை நல்லதாக இருக்க வேண்டும். இது பெரிய கஷ்டமான ஒன்று. என்னை மரணத்துக்கு உள்ளாக்கும் பிள்ளை என்று தாய் நினைப்பது தவறு. இது இயற்கையானது. இது நோயல்ல என்ற மனநிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் மனைவியைக் கணவன் தைரியப்படுத்தி ஆயத்தப்படுத்த வேண்டும். வயிற்றில் குழந்தை உருவாகிவிட்டது என்றவுடன் ஆரம்பத்தில் மனைவி சந்தோஷப்பட்டாலும், காலப்போக்கில் இக்குழந்தையை எப்படி நான் பத்து மாதங்களுக்குச் சுமக்கப் போகிறேன்? என்ற பயம் ஏற்படலாம். பிரசவ வேதனையை எப்படி சகித்துக்கொண்டு குழந்தையைப் பெறப்போகிறேன் என்று கலங்கித் தடுமாறும்போது, கணவன் அவளை அன்பு காட்டித் தேற்றி மனதில் தைரியத்தை ஊட்டுவது முக்கியமானதாகும். எல்லாவற்றிலும் மனைவிக்குக் கணவன் உதவி, ஒத்தாசை வழங்க வேண்டும்.

சில நாடுகளில் கணவனையும் பிரசவ வேளையில் பிரசவ அறையில் இருக்க அனுமதிப்பர். இங்கும் சில பிரத்தியேக வைத்தியசாலைகளில் சில டாக்டர்கள் அனுமதிப்பர்.

குழந்தை பெற்றெடுப்பது - அப்பா, அம்மா இருவரது செயலுமாகும் என்பதை மனதில் கொண்டு, கணவனும் அதில் பங்கெடுப்பது சாலச்சிறந்தது. சிலர் கணவன் - மனைவி உறவைவிடப் பிள்ளையே முக்கியம் என நினைத்துத் தாய் வீட்டுக்குச் செல்வர். பிறப்புக்காகத் தாய்வீடு செல்லவேண்டிய அவசியம் இல்லை. கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் தொடர்பை வளர்ப்பது முக்கியமானதாகும். இல்லையேல் கணவனின் மனதில் இக்காலத்தில் என்னைவிடப் பிள்ளை முக்கியமாகிவிட்டதே என்ற வெறுப்பான மனநிலை ஏற்பட இடமுண்டு. பிள்ளையை வளர்ப்பதில் தமது நேரத்திற்கேற்ப கணவன் - மனைவி இருவரும் பங்கெடுக்க வேண்டும். இது மனைவியின் வேலை என்று கணவன் ஒதுங்கி இருப்பது பிழை.

**- எஸ்.ஜே. யோகராஜா**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

## நமது நோக்கு

சிந்தனைக்கு

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.
- திருக்குறள்.

## கருத்து காரியமாகுமா?

வட-கிழக்கில் சுமுகநிலையை வலுப்படுத்தவும், தேவையற்ற பதற்றத்தைத் தணிக்கவும் - ஆக்கபூர்வமான ஆலோசனையொன்றை முன் வைத்துள்ளது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு.

வட-கிழக்கிலுள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், சட்டம் ஒழுங்கைப் பேணுவதான செயற்பாடுகளில் இனி இராணுவத்தினரைப் பயன்படுத்துவது - பதற்றத்தை அதிகரிக்கச் செய்யும், தேவையற்ற வன்முறைகளைத் தோற்றுவிக்கும் என கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது.

யுத்த காலங்களில் சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்கு இராணுவம் தேவையாக இருக்கலாம். ஆனால், அமைதி நேரத்தில் அவ்வாறான தேவை இல்லை எனவும் கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.

கண்காணிப்புக்குழுவின் இந்த அறிவிப்பானது - சுமார் ஒரு வருடகாலமாக நீடித்துவரும் யுத்த நிறுத்த காலத்தில் நடைபெற்ற படையினரின் செயற்பாடுகளை அவதானித்ததன் பேரிலேயே அமைந்ததொன்று என்பதோடு -

இறுதியாக - மானிப்பாயில் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் - கண்மூடித்தனமாக, மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் கண்காணிப்புக்குழுவின், படையினர் மீதான பார்வையில் மிக அழுத்தமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதை உணர முடிகின்றது.

மானிப்பாயில் பெண் போராளிகள் தாக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து - கலகமடக்கும் படையினர், மக்கள் மீது நடாத்திய தாக்குதலும் - கண்முன்னால் நடந்த யுத்த நிறுத்த மீறலெனவும் - இதனை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதெனவும் - கண்காணிப்புக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்தவகையில் - இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை, அத்துமீறல்களை நேரடியாகப் பார்த்த பின்னரே - கண்காணிப்புக் குழுவினர், இத்தகைய முடிவொன்றுக்கு வந்துள்ளனர் எனலாம்.

கண்காணிப்புக்குழுவின் இந்த நிலைப்பாடானது - காலத்தாற் பிந்தியதெனினும் - இந்தளவிலாவது உண்மையை, யதார்த்தத்தை உணர்ந்துகொள்ள அவர்கள் தலைப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டும்.

ஏற்கனவே - மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், நெடுந்தீவிலும், நெல்லியடியிலும் இறுதியில் மானிப்பாயிலுமாக - சட்டத்தைத் தம் கையில் எடுத்துக்கொண்டு - பழிவாங்கும் உணர்வுடனும், மனிதாபிமானம் எதுவுமற்றும் - எதிரிகளுடனான மோதல்போல படையினர் நடந்து கொண்டமை - அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்கள் என்பதோடு - தமிழ்மக்களை ஆத்திரமூட்டச் செய்யும் செயற்பாடுகளாயும் இருந்தது.

படையினரின் இந்தச் 'சட்டம் - ஒழுங்கு காப்பில்', தமிழர்கள் பலியானதும், படுகாயமடைந்ததும் - அமைதிக் காலத்தில் நடந்த இரத்தக்களரிகளாகவே வரலாற்றில் பதியப்பட்டன.

இதன் காரணமாக - பெருமுயற்சிகளினூடாக முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. மக்கள் மனதில் நம்பிக்கையீனமும், விரக்தியும் தூண்டப்படுவதற்கு படையினரின் செயற்பாடுகள் வழிகோலின.

இவ்வளவிற்கும் பின்னரே கண்காணிப்புக்குழு - இராணுவத்தின் சட்டம் - ஒழுங்கு பாதுகாப்புக் கடமை பற்றித் தனது அவதானிப்பையும் கருத்தையும் வெளியிட்டிருக்கிறது.

ஆனால் - கண்காணிப்புக்குழுவின் இந்தக் கருத்து - படைத்தரப்பில் எவ்வளவு தூரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்றோ, நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமென்றோ கூறமுடியாதுள்ள நிலையையும் கவனத்திற்கொண்டாக வேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்தும் - இராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்துவதிலும், நீக்குவதிலும் - அரசாங்கம் பெரிதாக எதையும் சாதித்திராதபோதும் -

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றம், பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள அரச, தனியார் கட்டடங்களிலிருந்து படையினர் வெளியேறுதல், சோதனைக் கெடுபிடியைக் குறைத்தல், கடற்தொழிலுக்குத் தடையாகவுள்ள முட்டுக்கட்டைகளை நீக்குதல் உட்படப் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அடிப்படையான விடயங்களில் - குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் எட்டப்பட்டிராத நிலையிலும் -

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், கடற்பரப்புக்களிலும் போராளிகள் மீதான அடாவடித்தனங்களும், வரம்பு மீறல்களும் அதிகரித்தே வரும் போக்கிலும் -

இராணுவத் தரப்பு, கண்காணிப்புக்குழுவின் கருத்தை ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகத்திற்குரியதே.

தமது மேலாதிக்கத்தை - இராணுவ நலன்சார்ந்த எண்ணத்தை, அமைதிக்காகப் படைத்தரப்பு விட்டுக்கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பும் கேள்விக்குரியதே.

இருந்தபோதும் - அண்மைய காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களில் இராணுவத்தரப்புக்குச் சாதகமான நிலையில் கருத்துக்களை வெளியிட்டும், செயற்பட்டும் வந்த கண்காணிப்புக்குழு - இந்தமுறை நியாயமான ரீதியில் வெளியிட்டிருக்கும் தனது கருத்தை நடைமுறைச்சாத்தியமாக்குமா என்ற வினாவுக்கு விடைதரும் பொறுப்பையும் சுமந்திருக்கிறது என்பது முக்கியமானதாகும்.

# தீர்வுக்குத் தம்மால் இடையூறு வரக்கூடாது என்பதற்காக கடற்புலிகள் தம்மை மாய்த்தனர்

## நெடுந்தீவுக் கடலில் உயிர்துறந்த வேங்கைகளின் நினைவுக் கூட்டத்தில் இளம்பரிதி

(வடமராட்சி கிழக்கு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி நாம் ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுபாட்டுப்பகுதிக்குட்பட்ட கடற்பரப்பில் நடமாட முடியாது. இதனை நாம் மீறவில்லை. ஆனால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஆயுதங்களுடன் துணிவுடனும், உறுதியுடனும் கடற்பரப்பில் உலாவினோம். இவ்வாறு, பருத்தித்துறை பஸ் நிலையத்தில், நெடுந்தீவுக் கடலில் காவியமான மூன்று போராளிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, இன்று எமது கடற்பரப்பிலே நிராயுதபாணிகளாக வந்த எமது பேராளிகளை - கடற்படை கைதுசெய்ய முற்பட்டது. இது கடலாதிக்க இறைமையைப் பாதுகாக்கப் போராடிய அம்மூன்று கடற்புலி மறவர்களுக்கும், புலிகளின் தன்மானத்திற்கும் இழுக்கான செயலாகத் தோன்றியதால் அவர்கள் ஈழமண்ணில் விதையாகிப் போனார்கள்.

கண்காணிப்பாளர்களை வெளியேற்றிவிட்டு, கடற்படையினரையும் தாக்காமல்தான் இவர்கள் தம்மை மாய்த்துள்ளார்கள். உண்மையில் யுத்த நிறுத்தம் என்று ஒன்று இருந்திராவிட்டால் நடந்திருப்பது வேறு. எதிரியின் கடற்கலமே வெடித்துச் சிதறியிருக்கும். ஆனால், தமிழ் இனத்திற்காக, தமிழர் எதிர்பார்க்கும் தீர்வுக்காகத் தம்மால் எந்த இடையூறும் ஏற்பட்டுவிடக்கூடாது என எண்ணியே அவர்கள் தம்மை மாய்த்துக் கொண்டார்கள்.

விடுதலைப்புலிகள் தமது உறுதியின்படி தாங்கள் அடிமையாக இருக்கமாட்டோம் என்னும் கருப்பொருளைக் காத்துவருபவர்கள். இதனையே நெடுந்தீவுக் கடலில் காவியமான மேஜர் சுதன், கப்டன் அன்பன், கப்டன் பொதிகை மாறன் ஆகிய மூன்று மாவீரர்களும் உறுதிபட எதிரிகளுக்கு விளக்கிச் சென்றுள்ளனர்.

இந்த விடயத்தில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் மிகுந்த அசிரத்தையே வெளிக்காட்டியுள்ளனர். அத்தோடு உண்மைக்குப் புறம்பான கருத்தையும் அவர்கள் கூறியுள்ளமை வருத்தத்திற்குரியதாகும் எனத் தெரிவித்தார். (17)

## குடாநாட்டுக்கு எரிபொருள் எடுத்து வருவதில் தடங்கல்

(கொழும்பு)

திருகோணமலை சீனன் குடாவிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால், யாழ். குடாநாட்டுக்கு எரிபொருட்களை எடுத்துவரும் பணி பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சீனன் குடாவிலுள்ள எரிபொருள் குதங்கங்களை, இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துக்கு அரசாங்கம் குத்தகைக்கு வழங்குவதை எதிர்த்தே ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தினால் திருகோணமலையில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கட்சியினர் பலர் தேசிய அரசு அமைப்பது தொடர்பாக ரகசிய பேச்சு!

### சரத் அமுனுகம எம்.பி. கூறுகிறார்

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த பலர் தம்முடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு பேசிவருவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்தைக் கலைக்கின்ற முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி சந்திரிகா கொண்டிருக்கிறார். ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி வாய்ப்பைப் பெறக்கூடிய சூழ்நிலையில் மட்டுமே அரசாங்கத்தைக் கலைக்கும் முடிவினை எடுப்பார் என்பதை ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார் எனத் தெரிவித்த சரத் அமுனுகம,

ஜே.வி.பியுடனான கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் சுமுகமான நிலையில் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஊர்வலத்தில் வந்தோரை சோதனையிட முற்பட்டதால் இ.தொ.கா.மாநாட்டில் குழப்பம்

(கொழும்பு)

இ.தொ.காவின் 33 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்ட பொதுமக்கள் மீது- பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினர் சோதனைகளை மேற்கொள்ள முனைந்தபோது, அதற்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் எதிர்ப்புத் தெரிவித்தார்.

மாநாட்டில் இறுதி நாளான நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தார். இதற்காக அங்கு பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் அதிகளவில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது போகம்பர பகுதியிலிருந்து ஊர்வலமாக வந்த மக்களைச் சோதனையிடப் பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் முற்பட்டனர். இதையடுத்து அவ்விடத்துக்குச் சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தடுத்து நிறுத்தியதுடன், சோதனையிடாமல் மக்களை அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தின்போது பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் ஒரு பொலிஸ் அதிகாரியும், பிரதமரின் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் காயமுற்றார்.

இதையடுத்துப் பொலிஸார் தமது பாதுகாப்பை இப்பகுதியிலிருந்து விலக்கிக்கொண்டனர்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் 500 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

சமுர்த்தி அதிகாரிகளின் சம்பளம் விரைவில் 500 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

அத்துடன், சமுர்த்தி அதிகாரிகள் 2 லட்சம் ரூபாவரை வீடமைப்புக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கும் வசதிசெய்து கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அதிகாரிகளுக்கு மோட்டார் சைக்கிள்கள் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற சமுர்த்தி அதிகாரிகளின் கூட்டத்திலேயே, அமைச்சர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

## புலிகளின் அழைப்பு; சங்கரி நிராகரிப்பு!

(கொழும்பு)

தம்மைச் சந்திக்குமாறு விடுதலைப்புலிகள் விடுத்த அழைப்பினை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி நிராகரித்து விட்டதாகக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

யாழ்.பொதுநூலகத் திறப்புவிழா ஒத்திவைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக ஆனந்தசங்கரி மனக்குழப்பத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ள கட்சியின் பேச்சாளர், இவர் ஒஸ்ரியாவுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கந்தரோடையில் விகாரை அமைப்பு கண்டித்து சுன்னாகத்தில் பேரணி!

(மல்லாகம்)

கந்தரோடையில் விகாரை அமைப்பதைக் கண்டித்து நாளை கண்டனப்பேரணி நடாத்தப்படவுள்ளது.

கந்தரோடையில் பௌத்தவிகாரை அமைப்பதற்குப் படையினர் மேற்கொண்டுவரும் முயற்சிகளைக் கண்டித்து வலிகாமம் கோட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலேயே இப்பேரணி நடாத்தப்படவுள்ளது.

நாளை காலை 9.30 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி- கந்தரோடைச் சந்தி, கே.கே.எஸ் வீதி வழியாக வலி. வடக்குப் பிரதேச செயலகத்தைச் சென்றடையும். பின்னர் அங்கு கண்டனப் பொதுக்கூட்டம் நடாத்தப்பட்டு, மகஜர் கையளிக்கப்படும்.

இக்கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து வலி. வடக்கு, தெற்குப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நாளைய தினம் மதியம்வரை கடையடைப்பில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (68)

# நெல்சன் மண்டேலா வளர்த்தெடுத்த மீள்-இணக்கப்பாட்டுப் பண்புகள்!

கடந்த இரு வாரங்களாக தென்னாபிரிக்கச் சமஷ்டி மாதிரியை இக்கட்டுரைத் தொடரிலே ஆராய்ந்து வருகிறோம்.



நெல்சன் மண்டேலா

இந்த வகையில் சென்ற வாரத்தின் இறுதியில் பல்லினக் கலாசாரத்திற்கு அப்பால் தென்னாபிரிக்காவில் புதிதாக உருவாகிவரும் கைத்தொழிலதிபர்கள் சமூகம் ஒன்றே - அந்நாட்டின் தேசியத் தைக் கட்டி வளர்ப்பதனை நாம் ஆராய்ந்திருந்தோம்.

இன்றைய தொடரிலே - தற்போதுள்ள தென்னாபிரிக்கத் தேசியத்தை உருவாக்குவதற்கு - இன்றுள்ள பொருளாதார மூலமானியக் (Economic element) கைத்தொழிலை விட - நீண்ட பகையுணர்வையும் முரண்பாட்டினையும் தமக்கெனக் கொண்டிருந்த - ஆங்கிலச் சிறுபான்மையினருக்கும் தென்னாபிரிக்கப் பெரும்பான்மையினருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட மீள் இணக்கப்பாட்டுச் செயன்முறை (Reconciliation process)யும் அடித்தளமாக அமைவதைப் பார்க்கலாம்.

இது இன்றைய அரசியல் திட்ட ஆய்வாளர்களால் முன்மாதிரியாகவும் எடுத்துரைக்கப்படுகின்றது. இம் மீள் இணக்கப்பாட்டுச் செயன்முறையில் - தனிப்பட்ட ரீதியாக தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பங்கும் - பணியும் மிகவும் அற்புதமானது.

அவரது பங்களிப்பினையும் பிரதான மீள் இணக்கப்பாட்டுக்குச் செயன்முறைக் காரணிகளைப் பற்றியும் இவ்வாரம் பார்ப்போம்.

### மீள் இணக்கப்பாட்டில் ஐந்து படிநிலைகள்

இந்த வகையில் - இன்று தென்னாபிரிக்காவின் முரண்பாட்டிற்குப் பற்பட்ட சமுகத்தின் (Post Conflict Society) - மீள் இணக்கப்பாட்டினை உருவாக்குவதற்கு உதவிய செயன்முறைகளில் பொதுவாக 5 படி நிலைகளை ஆய்வாளர்கள் முன் வைக்கின்றனர். அவையாவன-

- தனிக்குழு வாதத்திலிருந்து ஜனநாயக மார்க்கத்தினை நோக்கிய மாற்றுச் செயன்முறை முதற்படி நிலையாகும்.

- அதாவது ஒரு பெரும்பான்மை இனம் அல்லது சமூகம் அல்லது மதம் அல்லது அரசியற்கட்சி - ஏனைய சிறுபான்மையினரை அல்லது இனத்தினரை, மதத்தினரை ஜனநாயக வரன்முறைகளுக்கு சார்பாக - அவர்களையும் அங்கீகரித்துக்கொள்வது முதற்படிநிலையாகும்.

அதாவது, ஒடுக்கப்படும் மக்களின் கலாசாரத்தினை அவர்களின் நடத்தைக் கோலங்களை ஏற்று, அவற்றை அங்கீகரிப்பதனை இந்த முதற்படி நிலை எடுத்துக் கூறுகிறது.

- நசுக்கப்படும் மக்கள்மீது திட்டமிட்ட வன்முறைகளைப் பிரயோகிக்காதிருக்கின்ற அதே வேளை - அவர்களது மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தல் இரண்டாம் படிநிலையாகும்.

இந்த வகையில் - ஆளும் வர்க்கம் அல்லது இனம் - ஆளப்படும் இனத்தின் மீது முன்பு வன்முறைகளைப் பிரயோகித்திருந்தாலும், மீள் இணக்கப்பாட்டிற்கு வரும்போது - அவ்வாறான வன்முறைப் பிரயோகங்கள் எவையும் நடக்காதிருப்பதனை உறுதிசெய்ய வேண்டும்.

- மூன்றாவது மீள் இணக்கப்பாட்டு நிலையாக - முரண்பாடுகளைத் தவிர்த்து, முரண்பட்ட இனங்கள் அல்லது சமூகங்கள் தத்தமது சுயாட்சியினை உறுதி செய்யும் வகையில் அதிகாரப் பகிர்வினைக் (Power Sharing) கொண்டமைந்த அரசாங்க ஆட்சிமுறையினை உருவாக்குவது குறிப்பிடப்படுகின்றது.

அதாவது - இனவன்முறைகள், மதக் கலவரங்கள், சமூக முரண்பாடுகளுக்கு ஆளான தரப்பினரைக் கருத்திலெடுத்து - முரண்பாட்டிற்கான மூலவேரை அல்லது அடிப்படைக் காரணியை இனங்கண்டு, அதற்குத் தீர்வாக - நிர்வாகப் பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு, சமஷ்டி முறைமை எனப் பல்வேறு முறைகளில் அதிகாரப் பிரிவினைச் செய்யப்படவேண்டும் என்பதை மூன்றாவது படிநிலை சுட்டிக்காட்டுகின்றது.

- நான்காவது படிநிலையாக - சட்டத்தின் வல்லாட்சியினை (Rule of law) உறுதிசெய்வதான அரசியற்திட்டம் அமையவேண்டும் என்பது எடுத்துரைக்கப்படுகிறது.

அதாவது, எதிர்காலத்தில் முரண்பாடுகள் உருவாகாமல் இருப்பதற்காக - முரண்பட்டுக்கொண்ட சமூகங்களின் சுயாட்சியினை உறுதிசெய்யும் வகையில், சட்டப்பாதுகாப்பு அளித்தலை நான்காவது கட்டம் எடுத்துச்சொல்கின்றது.

எந்தவொரு நாட்டினதும் தாய்ச் சட்டமாகிய - அரசியற்திட்டம் சகல சமூகங்களினதும் சுயாட்சியை உறுதி செய்வதாக உருவாக்கப்படுவதோடு, அந்நாட்டிலுள்ள நீதிமன்றங்களும், நீதிபதிகளும் சட்டத்தின் வல்லாட்சியினை உறுதிசெய்யும் வகையில் பராபட்சமின்றி தொழிற்படவேண்டும் என்பதனை இப்படி நிலை வலியுறுத்துகின்றது.

- ஐந்தாவது படிநிலையில் - கடந்த காலத்தில் நடைபெற்ற வன்முறைகள் மேலும் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க உறுதி செய்வதான செயற்பாடுகள் பற்றிக் கூறப்படுகின்றது.

அதாவது - தொடர்ச்சியாக வன்முறைகளிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்த சமூகங்கள் உடனடியாக சமாதானத்தினை வந்தடையக்கூடிய புறச்சூழல் ஒரு போதும் காணப்படாது. எனவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் முரணபாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு இருதரப்பினரில் இருந்தும் கூட்டுக் குழுக்களை அமைத்து, பேச்சுக்கள் வழியாக - முரண்பாட்டு விடயங்களுக்குத் தாமே தீர்வுகாண வழிவகை செய்யப்படவேண்டும் என்பது இங்கு முக்கியமானது.

இந்த ஐந்து படிநிலைகளையும் - முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான நுட்பங்கள் (Conflict Resolution Techniques) எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இன்று முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான நுட்பங்கள் என்ற கற்கைப் பாடநெறி மேற்கத்தேயப் பல்கலைக்கழகங்களிலே கற்பிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான




வின்னி மண்டேலா

நுட்பங்கள்' - போதுமையானவையாக இருந்தபோதும் உலகளவில் தென்னாபிரிக்கச் சூழலிலேயே முதன்முதலில் இந்நுட்பங்கள் பெரிதும் வெற்றிபெற்றன என்று கூறப்படுகிறது. இதனடிப்படையில் தென்னாபிரிக்க அனுபவத்தினை இனி நாம் நோக்குவோம்.

### தென்னாபிரிக்கச் சூழலில் முரண்பாடுகளைத் தீர்த்த நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்கச் சூழலை எடுத்துக் கொண்டால் - முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் தனிப்பட்ட நேர்மையான நடத்தையும், அர்ப்பணிப்புமே - தென்னாபிரிக்க மீள் இணக்கப்பாட்டிற்கு மிகவும் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது நீண்டகால சிறை வாழ்க்கைக்குப் பின்னர் - ஜனாதிபதி என்ற வகையில் அவருக்குக் கிடைத்த அதிகாரத்தினை வைத்துக்கொண்டு - தன்னைச் சிறையில் கொடுமையிலாழ்த்திய சிறுபான்மை ஆங்கிலேயர் மீது எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையினையும் எடுக்காது - மன்னித்துக் கொண்ட அவரது சுபாவம் - தென்னாபிரிக்காவில் அமைதியையும், சமாதானத்தினையும் ஏற்படுத்தியது என்பது மிகையற்ற உண்மையாகும்.



வண.டெஸ்மன் டுட்டு

தான் மட்டும், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்த ஆங்கிலேயர்களை மன்னித்துவிட்டது மட்டுமல்லாமல் - பெரும்பான்மையான தென்னாபிரிக்கர்களிடம் மீண்டும் அதிகாரம் கிடைத்தபோதும், எவ்வித பழிவாங்கும் நடவடிக்கையினையும் அவர்கள் மேற்கொள்ளாது மிகவும் கண்டிப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வந்தவர் மண்டேலா என்பது குறிப்பிடத்தக்கது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக - தான் சிறையில் இருந்த சமயம், தனது மனைவியான வின்னி மண்டேலாவுக்கு ஆங்கிலேயச் சிறுபான்மை அரசாங்கம் செய்த கொடூரங்களுக்கு - வின்னி மண்டேலா அப்போதிருந்த அரசதரப்புப் பிரதிநிதிகளைத் திட்டமிட்டுக் கொலை செய்தமை உறுதிசெய்யப்பட்டபோது - தனது நடுநிலையான உளப்பாங்கோடு வின்னி மண்டேலாவிற்கு- மனைவி என்றும்பாராது தண்டனையை வழங்கியது, மண்டேலாவின் மீள் இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கு முதலாவது படிநிலையாக இருந்தது என்றே உலகம் இன்றும் போற்றுகின்றது.

தென்னாபிரிக்க மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழுவை ஆரம்பித்த மண்டேலா - மீள் இணக்கப்பாட்டில் தென்னாபிரிக்காவின் ஒவ்வொரு பிரஜையும் பங்களிப்பு செய்யத்தக்க வகையில் - அடிமட்ட நிலையில் இருந்து (Grass root level) ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமித்ததுடன் - தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் மேற்படி ஆணைக்குழுவினையும் வைத்திருந்தார்.

ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகியபோதும், மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக இன்னும் மண்டேலாவே செயற்பட்டு வருகின்றார் என்பது அவரது சிறப்புக்கு இன்னோர் சான்றாகும்.

அடுத்ததாக, ஜனநாயக முறைப்படியான சிவில் சமூகத்தினை உருவாக்கும் முதற்செயற்பாடாக - மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழுவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழு மூலமாக - தென்னாபிரிக்காவில் புதிய ஜனநாயக அரசியல் கலாசாரத்தினை நெல்சன் மண்டேலா உருவாக்கினார்.

அதாவது - மேற்படி ஆணைக் குழுவிற்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளும் வெளிப்படையாகவும், பொறுப்புணர்வுடனும் நடத்தப்பட்டதன் மூலம் - ஜனநாயகப் பண்பை தென்னாபிரிக்காவில் அவர் பகிரங்கமாகவே உறுதிப்படுத்தினார்.

இந்தவகையில் - தென்னாபிரிக்காவின் மீள் இணக்கச் செயற்பாட்டுக் குழுவினருடன் - சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களையும் இணைத்து 'ஜனாதிபதி நிதி' மூலமாகப் பிராந்திய வேறுபாடுகளோ, இனத்துவ வேறுபாடுகளோ எதுவுமின்றி - புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளையும் மண்டேலா மேற்கொண்டார்.

இதன் மூலம் முன்பு அரசாட்சியை மேற்கொண்டு வந்த ஆங்கிலச் சிறுபான்மைச் சமூகத்தின் நம்பிக்கையினை நெல்சன் மண்டேலா வென்றெடுத்தார் என்றே கூறலாம்.

## சுயநிர்ணயம் ஒருபார்வை

**பகுதி-21** **வேலும்மயிலும் சேந்தன்**

நெல்சன் மண்டேலாவின் செயற்பாடடில் அவருடன் பெரிதும் துணை நின்று ஆலோசனைகளை வழங்கியவர் தென்னாபிரிக்க அதி மேற்றிராணியார் டெஸ்மன் டுட்டு (Desmond Tutu) என்பவராவார்.

அவரே தென்னாபிரிக்காவின் நிலைமாறும் சமூகநீதிக்கு (Transitional Social Justies) பொறுப்பாக நெல்சன் மண்டேலாவால் நியமிக்கப்பட்டார்.

இவ்விருவரதும் நேர்மையான செயற்பாடுகளே - புதியதொரு தென்னாபிரிக்க சமூகத்தினை உலகிற்கு இன்று தந்துள்ளன.

இவ்விருவரும் ஆர்ஜென்ரீனா, சிலி, சல்வடோ நாடுகளின் சமூகம், மீள் இணக்கப்பாட்டு நடவடிக்கைகளை ஆராய்ந்தே தென்னாபிரிக்காவினது மீள் இணக்கப்பாட்டிற்கான ஆணைக்குழுவை உருவாக்கியதாகக் கூறப்பட்டபோதும், அந்நாடுகளைவிட யதார்த்தபூர்வமாகவும், வெற்றிகரமாகவும் மீள் இணக்கப்பாட்டு ஆணைக்குழு தென்னாபிரிக்காவில் செயற்பட்டது என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

(பிரதி செவ்வாய் தொடரும்...)

---

# மாமுனை - கட்டைக்காடு வீதி திருத்தம் மருதங்கேணியில் நாளை கலந்துரையாடல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான வீதியைத் செப்பனிடுவதற்கான கலந்துரையாடல் நாளை 19 ஆம் திகதி, உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் - உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் மற்றும் நிகொட் திட்ட அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். உலக உணவு ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன் இவ் வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதி சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ளதெனவும் சிரமதானப் பணிகளை செய்பவர்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கு உலக உணவு திட்டம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் தெரியவருகின்றது.

### சனசமூக நிலையம் திறப்பு

(சரசாலை)

மீசாலை வடக்கிலுள்ள "சுடர்ஒளி" சனசமூக நிலையம் கடந்த சனியன்று மீளவும் திறந்துவைக்கப்பட்டது.

கடந்த 2 வருடங்களாகச செயற்படாமல் இருந்த இச்சனசமூக நிலையம் அப்பகுதி மக்களினதும், இளைஞர்களினதும் ஒத்துழைப்புக்களினாலேயே புனரமைப்புச் செய்யப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது.(34)

---

# பௌத்த பீடாதிபதிகள் கோரிக்கை உதவிக் கூட்டத்தில் ஆராயப்படும்

## யசுஷி அகாஷி உறுதி

(கொழும்பு)

இலங்கையின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமல்ல அனைத்துப் பகுதிகளுக்கும் ஜப்பான் அபிவிருத்திக்கான உதவிகளை வழங்க வேண்டும் என்ற பௌத்த பீடாதிபதிகளின் கோரிக்கை பரிசீலிக் கப்படும் என, இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

மல்வத்தை பீடாதிபதி, அஸ்கிரிய பீடாதிபதி ஆகியோர் விடுத்த வேண்டுகோள்கள் தொடர்பாக அகாஷி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

பௌத்த பீடாதிபதிகளின் கோரிக்கை ரோக்கியோவில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரோக்கியோவில் யூன் மாதத்தில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்திற்கு ஜப்பானியப் பிரதம மந்திரி தலைமை தாங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒன்றுக்கு ஜப்பானியப் பிரதம மந்திரி தலைமைவகிப்பது இதுவே முதல் தடவையாகும்.

இது, இக்கூட்டத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும், இக்கூட்டம் பற்றி ஜப்பான் அதிக முயற்சிகள் எடுத்துவருவதாகவும் ஜப்பானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எப்படி, எதுவரை....!

அணிகள் எவ்வாறு உலகக் கிண்ணப்போட்டிகளைச் சந்திக்கப்போகின்றன. பலம்,பலவீனங்கள் என்ன? இதோ ஒரு கணிப்பு. சர்வதேச நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்டது இது. இதில் உங்கள் கருத்தென்ன ? நீங்கள் ஒத்துப்போகிறீர்களா? இல்லை மறுத்தான் அடிக்கப்போகிறீர்களா?



**பாகிஸ்தான்**

*அணித்தலைவர்* - வக்கார் யூனுஸ்.

*பயிற்றுநர்* - றிச்சட் பைபஸ்

குழு B - அவுஸ்திரேலியா, இந்தியா, இங்கிலாந்து, சிம்பாப்வே, நமீபியா, நெதர்லாந்து.

*பலம்* - ஆட்டத்தின் திசைய்ய வெற்றியின் பக்கம் திருப்பும் ஆற்றல் கொண்ட வீரர்கள் நிறையவே உள்ள அணி. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது MAN OF THE MATCH பெருமை பெறாத வீரர்கள் இல்லை.



விக்கெட் வீழ்த்துவதில் வல்லவர் அக்ரம்.

*பலவீனம்* - அணிவீரர்கள் மத்தியிலுள்ள ஒற்றுமையின்மை, குழு மனப்பான்மை, சிலவேளைகளில் நம்பிக்கை வைக்க இயலாத களத்தடுப்பு. அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவுடன் களத்தடுப்பில் ஒப்பிடமுடியாது. தாழ் நிலையடையும்போது அணியைத் தூக்கிவிடும் ஆற்றலுள்ளவர்கள் அப்துர் றஸாக், யூசுப் யுகானா போன்ற ஒரு சிலரே.

*முக்கிய நபர்* - வாசிம் அக்ரம். இவரது இறுதியான உலகக் கிண்ணப் போட்டி இது. அணித்தலைவருக்கு இம்முறை வலதுகை. அதீத திறமை கொண்டவர். இருப்பினும், தனக்குப் பிடிக்காத சூழ்நிலையில் தன் திறமையைத் தானே கட்டுக்குள் கொண்டுவருபவர். இது ஆபத்தானது.

*ஒரு நாள் தரம்* - அண்மையில் விளையாடிய 10 ஒருநாள் போட்டிகளில் 6 இல் தோல்வி. ICC வெற்றிக் கிண்ணப்போட்டிகளில் முதல் சுற்றில் out. 4 - 1 என்றவாறு தென்னாபிரிக்காவிடம் தோல்வி. சிம்பாப்வேயை 5 ஆட்டங்களில் வென்றது சிறிது ஆறுதல்.

*முன்னைய உலகக்கிண்ணச் சாதனை* - 92 இல் இங்கிலாந்தை வெற்றிகொண்டு சம்பியன் பட்டம். 75 இல் மூன்று ஆட்டங்களில் ஒன்றில் மட்டும் வெற்றி. கால் இறுதி ஆட்டத்திற்கு 1996 இல் வந்தவர்கள்.

அரையிறுதி ஆட்டத்துக்கு 79, 83, 87 இல் வந்தவர்கள், 99 இல் இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டவர்கள்

*எதிர்வு கூறல்* - அரையிறுதி ஆட்டம் வரை.

## உன்னால் முடியும் தம்பி

இந்திய - அவுஸ்திரேலியப் போட்டியில், இந்தியா படுதோல்வியடைந்தது பல்வேறு தரப்பிலும் பலத்த அதிருப்தியைக் கிளப்பியுள்ளது. இதிலிருந்தே இந்தியா ஒரு உயர்தர ஒருநாள் அணியென்பதும், எல்லோராலும் கணிக்கப்பெற்ற அணி என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றது.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான், இந்திய அணித்தலைவர் கங்கூலியைக் கடுமையாகச் சாடியுள்ளார். முதலாவதாக, இந்தியா துடுப்பெடுத்தாடியதை நியாயப்படுத்தும் இம்ரான், ஒரு பெரிய எண்ணிக்கைக்குத் தங்களைத் தயார்படுத்தியிருக்க வேண்டும் என்றும் இந்தப் பொறுப்பு அணித்தலைவருக்கே உரியது என்றும் கூறுகிறார்.



கங்கூலி, டிராவிட், அகர்கர் - என்ன நடந்தது?

தன்னம்பிக்கை குறைவாக உள்ள ஒரு அணியின் தலைவர் என்ற வகையில், இவரது அணுகுமுறை வித்தியாசமானதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தனது விக்கெட்டை மிகப் பொறுப்பற்ற முறையில் தானே கங்கூலி இழந்தார். அதன்பின், மற்றைய வீரர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியும் என்று கேட்கிறார் இம்ரான்.

இந்தியாவின் முதல் பிரச்சினை- தன்னம்பிக்கை இன்மையும், தம்மைத் தாழ்த்திக்கொண்ட மனநிலையும்தான் என்று கூறும் இம்ரான், இந்தியா சிறந்ததொரு துடுப்பாட்ட வரிசையைக் கொண்டது, கட்டுக்கோப்புள்ள அணியும்கூட. இப்படிப்பட்ட அணி தென்னாபிரிக்கக் களங்கள் தமக்குப் பரிச்சயமற்றவை எனறு கூறுவது பொருத்தமற்றது என்றும் கூறுகின்றார்.

ஸ்ரீவ் வோ போன்ற ஒரு அணித்தலைவர் இருப்பதே பெருமை என்பவர், இந்த அளவிற்கு அவுஸ்திரேலியாவை வளர்த்தெடுத்ததற்கும், 1999 உலகக் கிண்ணத்தை வென்றதற்கும் ஸ்ரீவ் வோவின் தலைமையே காரணம் என்றும் கூறி முடிக்கிறார்.

சுனில் கவாஸ்கர் மறுபுறம் இந்திய அணியைத் திட்டித் தீர்க்கிறார். இவர் குறிப்பிடும்போது, இந்தியாவின் நிலை பரிதாபகரமானது என்கிறார். இவர்கள் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை. இவர்களுக்கு ஏனோதானோவென்ற மனப்பாங்கு, தாழ்வுச்சிக்கல் எல்லாமே ஏற்பட்டு விட்டது.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய இரண்டு ஆட்டங்களில் இருந்தே, உலகக் கிண்ணத்தை இழந்துவிட்டதை உறுதிப்படுத்தமுடிகிறது என்கிறார்.

மிகுந்த கோபமடைந்திருக்கும் கவாஸ்கர், நெதர்லாந்துடனான போட்டியில் சமாளித்ததாகக் கூறிக் கண்டிக்கிறார். எதிர்காலத்தில் இந்திய ரசிகர்கள் ரசிக்கக்கூடியதாக இருக்கப்போவது இந்திய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஆட்டமாகத்தான் இருக்கும் என்றும் கேலியாகக் கூறுகின்றார்.

கிரிக்கெட் உலகம் முழுவதுமே இந்தியாவைத் திட்டும்போது, மேற்கண்ட இருவரின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணங்கள் உண்டு.

இரண்டு பேருமே கிரிக்கெட் உலகில் சக்கரவர்த்திகளாகத் துலங்கியவர்கள், சாதனை வீரர்கள். கவாஸ்கர் இந்தியக் கிரிக்கெட்டின் GOD FATHER மாதிரி. இம்ரானைப் பொறுத்தவரை அவர் இன்று ஓர் அரசியல்வாதி. இந்திய பாகிஸ்தானிய அரசியல் உறவு அப்படியொன்றும் இனிப்பானதல்ல. இருந்தும், ஒரு உண்மையான, உபகண்ட கிரிக்கெட் வீரனாக, ஒரு ஆசிய நாட்டவனாக இம்ரானால் இந்தியாவின் தோல்வியைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை என்பது, ஒருவிதமான உணர்வோடு பார்க்கப் படவேண்டிய விடயமல்லவா?



இந்தியாவை விளாசுகிறார் ஹேடன்.

இன்னொரு புறத்தில், இந்திய அணி என்பது சில்லறை அணிகளுள் ஒன்றல்ல. நிறைந்த கிரிக்கெட் பாரம்பரியம் கொண்டது. அணியாக, தனிநபர்களாக பெரும் சாதனைப் பட்டியலைத் தன்னகத்தே கொண்டது.

இப்படியான வரலாறு கொண்ட இந்திய நாட்டின் இன்றைய அணியும் எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. அப்படி இருக்க, ஏன் இப்படி என்ற ஆதங்கமும், கோபமும்தான் இவ்விருவரின் கருத்துக்களிலிருந்து பெறக்கூடியதாக இருக்கின்றது.

எனவே, கங்கூலி And Co. கிரிக்கெட் உலகம் உங்களுடன் சேர்ந்தே நிற்கிறது. உங்களால் முடியும் என்று நம்புகின்றது. நம்பிக்கைக்கு உயிர் கொடுங்கள்!

- நிர்மலன்.

## ஆசியர்கள் பலம் பெறுவோம்



சந்தர்போலின் அதிரடி ஆட்டம்.

இன்றைய ஒரேஒரு ஆட்டம், பங்களாதேஷ் அணி மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆகியவற்றுக்கிடையில் நடைபெறப்போகின்றது.

மேற்கிந்தியத் தீவுகள் - ஒரு வெற்றி (தென்னாபிரிக்கா), ஒரு தோல்வி (இலங்கை) யுடன் பங்களாதேஷைச் சந்திக்கிறது.

ஆனால், பங்களாதேஷ் அணி இரண்டு தோல்விகளுடன் (கனடா, இலங்கை) களம் இறங்குகின்றது. இந்த ஆட்டத்திலும் பெரிதாக எதிர்பார்க்க எதுவும் இல்லாவிட்டாலும், பங்களாதேஷ் ஓரளவில் கௌரவமான முறையில் ஆடும் என்றே எதிர்பார்க்கப் படுகிறது.

இத்தகைய சுற்றுப்போட்டிகளில் சரியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது, பங்களாதேஷ் அணியின் எதிர்கால கிரிக்கெட் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

தனக்கு அண்மையில் உள்ள இரண்டு நாடுகள் பலம் வாய்ந்த அணிகளைக் கொண்டிருக்கும்போது, பங்களாதேஷ் அணியும் விரைவில் வேகமான வளர்ச்சியொன்றைக் காட்டவேண்டும்.



ஏனெனில், தென்னாசியப் பிராந்தியத்தின் ஏழு நாடுகளில், நான்கு நாடுகள் TEST அந்தஸ்துப் பெற்ற நாடுகள். அவை நான்குமே சமபலம் கொண்டவையாக இருக்க வேண்டாமா?

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் இன்றைய போட்டியில் பெறப்படும் வெற்றியானது, கடந்த போட்டி நிலவரங்களுடன் ஒப்பிடும்போது அணிக்கு அவசியமானதொன்றாகவும் அமையும் என்பதும் நிச்சயம். ❑

- இந்திரன்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ண இறுதிப் போட்டியொன்றில் பெறப்பட்ட அதிகுறைந்த அணியின் ஓட்டம் எத்தனை?

**132 - பாகிஸ்தான் Vs அவுஸ்திரேலியா (1999)**

### கடந்து வந்த பாதையில்...



நமீபியாவுக்கெதிராக 36 ஓட்டங்கள் பெற்ற பாகிஸ்தானின் லத்தீப்.



அடித்தாடும் யூனுஸ்கான்.




நெதர்லாந்து விக்கெட் விழ தலைவரும் ஏனைய இங்கிலாந்து வீரர்களும்.



ஜேம்ஸின் நான்கு விக்கெட்டுக்களில் ஒன்று.



அரைச் சதம் அடித்த டி லீட்.



நிக்கை அவுட்டாக்கிய பிளின்டோவ்.

நமது ஈழநாடு
Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
இன்றைய ஆட்டம்
மேற்கிந்தியத்தீவுகள் Vs பங்களாதேஷ் - Willow Moore Park, Benoni - 2pm

திருமலை சாம்பல்தீவில்

# கைதான போராளிகள் பிணையில் விடுதலை



நீதிமன்றம் கொண்டுவரப்படும் இரண்டு பெண் போராளிகளும்.

திருமலை சாம்பல்தீவுப் பகுதியில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பெண் போராளிகளும் நீதிபதி எஸ்.தியாகேந்திரனால் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணையின்போது சிறிலங்கா தரப்பில் காவல்துறை அதிகாரி தயா சமரவீர, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபிக்கவில்லை.

# மாநகரசபை நடவடிக்கை; ஆணையாளர் பொறுப்பேற்பு!

யாழ். மாநகர சபையின் நடவடிக்கைகளை மாநகரசபையின் ஆணையாளரைப் பொறுப்பேற்குமாறு வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

நேற்று நள்ளிரவுடன் உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்ததை அடுத்து, மாநகரசபையின் அனைத்து நடவடிக்கைகளையும் இன்றுமுதல் பொறுப்பேற்குமாறும், இந்த நியமனத்தினை மறுஅறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2,13)

ULTRA HOSPITAL SUPPLIES

ULTRA HEALTH CARE
(Australia Holdings)
பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- கட்டடப் பொறியியலாளர்
- கட்டட மேற்பார்வையாளர்
- எலெக்றிசன்
- பெயின்ரர்
- மேசன்
- லேபர்
- வெல்டர்
- பிளம்பர்
- சாரதி

5 வருட அனுபவம் உடைய தகுதியானவர்கள் உடனடியாக தமது விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

○ எங்கள் மருத்துவ சேவையை ஆங்காங்கு செயற்படச் செய்வதற்கு குத்தகைக்கு வீடுகள் தேவைப்படுகிறது.
○ சைவ உணவு சமைப்பதில் அனுபவமுள்ளவர்களும் உடன் தேவை.

தொடர்புகொள்ளவும்.
ULTRA HEALTH CARE
Distributing in Srilanka, India and Maldives
740, Navalar Road, Jaffna
T.P:- 222 -3393
Mobile:- 077 -773 - 4175/077 -724 - 4725
E.mail: Ultraintl @ hotmail . com
(சி/600)

# யாழ். வர்த்தகக் கைத்தொழில்; ஆராய சுவீடன் தூதுவர் விஜயம்!

(யாழ்ப்பாணம்)



யாழ். குடா நாட்டில் வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கென, இலங்கைக்கான சுவீடன் நாட்டுத் தூதுவர் ஆன் மேரி பல்னியஸ் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்தார்.

யாழ்ப்பாணம் வருகைதந்த இவர், யாழ்ப்பாணத்திலுள்ள பல கைத்தொழிலாளர்களையும், வர்த்தகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுவீடன் நாட்டுத் தூதுவர் தனது விஜயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், கடந்தகால யுத்தத்தினால் இலங்கையில், குறிப்பாக வட - கிழககுப் பகுதிகளில் வர்த்தகக் கைத்தொழில்கள் பல பாதிப்படைந்துள்ளன. இவற்றை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்குடன் சுவீடன் நாடு செயற்படவுள்ளது.

இதற்கென வட - கிழக்கிலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. முதலில் இவற்றிலுள்ள வர்த்தக, கைத்தொழில் பிரச்சினைகள் பற்றி ஆராயவுள்ளோம். இதன் நிமித்தம் யாழ்ப்பாணத்திலும் வர்த்தக, கைத்தொழில் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராயவே இங்கு வந்துள்ளோம் என்றார்.

இங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து இவற்றைத் தீர்ப்பதற்கும், கைத்தொழில், வர்த்தகம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் ஐந்து வருடங்களுக்கு சுவீடன் தொடர்ந்து உதவி செய்யவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இவருடன் இலங்கை வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனத்தின் செயலாளர் சமந்த விக்கிரமசிங்கவும் வருகை தந்துள்ளார். (லி

# விமானத்தின் பாகங்களை புலிகள் தருவித்துள்ளனராம்!

விடுதலைப் புலிகள் பாங்கொக்கில் இருந்து மூன்று விமானங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களைத் தருவித்துள்ளனர் என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் பாங்கொக்கில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயமே, இலங்கைக்குள் இந்த உதிரிப்பாகங்கள் கொண்டுவரப்பட்டதாக ஜே.வி.பியினர் தெரிவித்துள்ள னர்.

மேலும், ஜே.வி.பியினர் கருத்து வெளியிடுகையில் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் சுமார் இரண்டாயிரம் தடவைகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர். (01)

# கனடா நாடுகடத்துகிறது

கனடா, ரொரன்ரோவில் குழு மோதலில் ஈடுபட்டு, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 39 பேரில், 34 பேரை நாடுகடத்துவதற்கான ஏற்பாடுகளில் கனேடிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கைதானோரில் ஐவரின் மனுக்கள் மட்டுமே விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. எஞ்சியோர் விரைவில் நாடு கடத்தப்படவுள்ளனர்.

## இலங்கை...

இலங்கையின் அபிவிருத்திக்கென நோர்வே அரசு 1,500 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கி வருகின்றது. இந்த மாநாடு இன்று முடிவுறும்.

## டோறா...

நேற்றுக்காலை முதல் மாலை வரை - மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வள்ளங்களுக்கு அருகில் 9 டோறாப்படகுகளில் கடற்படையினர் சென்று அவர்களைப் பயமுறுத்தியுள்ளனர்.

## திருமலை...

போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

நகரில் சன நடமாட்டமும் மிகவும் குறைந்து காணப்பட்டது.

## தம் மீதான...

சி.வி.கே.சிவஞானமும் உரையாற்றினார்கள். தொடர்ந்து ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றினை, யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம், யாழ். அரச அதிபர் பத்மநாதனிடம் கையளித்தார்.

அத்துடன், இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வடபகுதி இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் ஒன்றியத்தினரும், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு முகவரியிடப்பட்ட மகஜரினை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்திடம் கையளித்தனர்.

பின்னர் இப்போராட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனித்தனியான மகஜர்கள், யாழ். ஊடகவியலாளர் சங்கத் தலைவரினால் கையளிக்கப்பட்டன.

11.30 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்தி இப்போராட்டத்தை நிறைவு செய்தார். அவர் தனது உரையில்,

மானிப்பாயில் தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு ஊடகத்துறை அமைச்சர், யாழ். மாவட்டத் தளபதிகள் மன்னிப்புக் கோர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தமிழ் ஊடகவியலாளர்களே தொடர்ந்தும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் தாக்கப்பட்டு வருகின்றனர். இதேபோன்று சிங்கள தேசத்தில் நடைபெற்றால் ஊடகத்துறை அமைச்சர் சும்மா இருப்பாரா எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ரா,லி)

# கற்கோவளம் முகாம் மூடப்பட்டது; வீடுகள் உரிமையாளரிடம் ஒப்படைப்பு

கற்கோவளம் பகுதியில் அமைந்திருந்த பாரிய இராணுவ முகாம் மூடப்பட்டுள்ளது. இந்த இராணுவ முகாம் கடற்கரையோரமாக உள்ள சிறிய இராணுவ முகாமுடன் இணைக்கப்பட்டு அம்முகாம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கற்கோவளம் இராணுவ முகாம் அகற்றப்பட்டதை அடுத்து, அங்கு படையினர் தங்கியிருந்த வீடுகள், அவற்றின் உரிமையாளர்களிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டன. இப்பகுதிக் கிராமசேவகர் முன்னிலையில், படை அதிகாரிகள் அவ்வீடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைத்தனர். (17)

# மரண அறிவித்தல்

நெடுந்தீவு

## வேலுப்பிள்ளை மதியாபரணம் வைத்தியர் அவர்கள்

(சுதேச ஆயுர்வேத வைத்தியர்)

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மதியாபரணம் (சுதேச ஆயுர்வேத வைத்தியர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (16-02-2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்மணியம்மா தம்பதிகளின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற வதனாம்பிகையின் அன்புக் கணவரும், தேவகுஞ்சரி, காலஞ்சென்ற பவளராணி, இராகினிதேவி, நகுலசிறி, மோகன்ராஜ், தண்மதி, ஜெகதீஸ்வரன், ஜெயவதனி, சத்தியவதனி, சத்தியபாமா, வாகீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராசா, பத்மநாதன், லோகேஸ்வரி, கேதீஸ்வரி, கிட்ணராசா, பஞ்சலிங்கம், கனகலிங்கம், மகேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், சயந்தன், தயானி, வசீகரன், விதுஷன், அச்சுதன், சுஜீதன், குஜிதா, தர்மிளா, ஜதுஷன், ஜதூஷினி, அனுசாந், சுலக்ஷன், லக்ஷண்யா, கபிலன், கௌதமி, கௌதமன், சிந்துஷா, லக்ஷன், கஜல், தர்ஷன், அபிஷன், கார்மிபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18-02-2003) செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு மேற்கு 4 ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.30 மணியளவில் நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம.நகுலசிறி (சிறி)
(மகன்)

*4 ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*
(250)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.64 | 97.01 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.88 | 156.26 |
| 1 யூரோ | 103.30 | 104.51 |
| 1 சுவிஸ் பிராங் | 69.97 | 71.16 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.77 | 57.84 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.